தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்

www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 186 17.02.2026 செவ்வாய்க்கிழமை ▸▸Chennai ▸▸Volume: 01 ▸▸Issue: 186 ▸▸Tuesday ▸▸pages 8 ▸▸Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(17–02–2026)
விசுவாவசு ஆண்டு, மாசி–5
பிறை: தேய்பிறை
திதி
அமாவாசை இரவு 6.30 வரை
பிறகு பிரதமை
நட்சத்திரம்:
அவிட்டம் இரவு 10.17 வரை
பிறகு சதயம்
யோகம்
சித்த/மரணயோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00 – 4.30 மணி
எமகண்டம்
காலை 9.00–10.30 மணி.
சூலம் – வடக்கு.
நல்ல நேரம் :
காலை 8–9 மணி.
மாலை 5–6 மணி

மேஷம் ..................... வரவு
ரிஷபம் ..................... நட்பு
மிதுனம் ..................... புகழ்
கடகம் ..................... சுகம்
சிம்மம் ..................... பயணம்
கன்னி ..................... அமைதி
துலாம் ..................... சாதனை
விருச்சிகம் ..................... லாபம்
தனுசு ..................... ஆர்வம்
மகரம் ..................... உயர்வு
கும்பம் ..................... முயற்சி
மீனம் ..................... மேன்மை

# வளர்ந்த நாடாக உருவாக நாங்கள் ஆவலுடன் உள்ளோம் என்பதை இந்த பட்ஜெட் காட்டுகிறது: பிரதமர் மோடி பெருமிதம்

**புதுடெல்லி,பிப்.17:**

”இந்த பட்ஜெட் கட்டாயத்தினால் உருவானது அல்ல. தயார் நிலை மற்றும் உத்வேகத்தால், வளர்ந்த நாடாக உருவாக நாங்கள் ஆவலுடன் உள்ளோம் என்பதை காட்டும் பட்ஜெட்” என பிரதமர் மோடி கூறியுள்ளார்.

இந்த ஆண்டு மத்திய பட்ஜெட் குறித்து பிரதமர் மோடி கூறியதாவது: “நமது நாட்டில் திறன் மிகு இளைஞர்கள் அதிகளவில் உள்ளனர். குறைந்த பணவீக்கம் மற்றும் பொருளாதார நிலைத் தன்மையுடன் கூடிய வலுவான வளர்ச்சியில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். விண்வெளி, விளையாட்டு, ஸ்டார்ட்-அப்கள் எனப் பல்வேறு துறைகளில் நமது இளைஞர்கள் சாதனை படைத்து வருகின்றனர்.

இந்த முன்னேற்றங்களின் காரணமாக, மக்கள் தற்போதைய சூழலை, இந்தியாவுக்கான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பாகப் பார்க்கிறார்கள். இந்த முன்னேற்றங்கள் வேகம் எடுத்துள்ள நிலையில், நாடு 75-வது சுதந்திர தினத்தை கடந்துள்ளது. ஒரு வளர்ந்த நாட்டை உருவாக்குவது என்பது வெறும் உள்கட்டமைப்பு அல்லது பொருளாதாரம் சார்ந்தது மட்டுமல்ல, அது தூய்மை உட்பட பல சமூகப் பழக்க வழக்கங்கள் சார்ந்தது என்பதையும் மக்கள் அறிந்துள்ளனர்.

இந்த பட்ஜெட் கட்டாயத்தினால் உருவான கணக்கு புத்தக பட்ஜெட் அல்ல. தயார் நிலை மற்றும் உத்வேகத்தால் வளர்ந்த நாடாக உருவாக நாங்கள் ஆவலுடன் உள்ளோம் என்பதை பிரதிபலிக்கும் பட்ஜெட்.

எனவே, இந்த பட்ஜெட்டை வெறும் ‘பட்ஜெட் 2026’ ஆக மட்டும் பார்க்காமல், 21ம் நூற்றாண்டின் 2-வது காலாண்டின் முதல் பட்ஜெட்டாகப் பார்க்க வேண்டும். நாம் இப்போது எடுக்கும் முடிவுகள் 2047-க்குள் வளர்ச்சியடைந்த பாரதம் உருவாக அடித்தளம் அமைக்கின்றன. வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதில் பெண்கள் முக்கிய பங்காற்றுவர் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

பெண் குழந்தைகள் பிறப்பது முதல், அவர்களின் எண்ணங்கள் நிறைவேறும் வரை முன்னேற்றத்துக்கு தேவையான நடவடிக்கைகளையும், சீர் திருத்தங்களையும் அரசு செய்து கொண்டிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக, அறிவியல் மற்றும் தொழில்நுட்பதுறைகளில் பெண்கள் முன்னணியில் உள்ளனர் என்பது பெருமையான விஷயம். விண்வெளித்துறையாக இருக்கட்டும் அல்லது ஸ்டார்ட் அப் நிறுவனங்களாக இருக்கட்டும், அனைத்து துறைகளிலும் பெண்கள் சிறப்பாக பணியாற்றுகின்றனர்.

2014 முதல் முந்தைய நிர்வாகங்கள் விட்டுச் சென்ற கட்டமைப்பு இடைவெளிகளை நாங்கள் சரி செய்துள்ளோம், பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்தியுள்ளோம். நமது விவசாயிகளின் கண்ணியத்தை உறுதி செய்துள்ளோம். இந்த பட்ஜெட் வேகத்தை அதிகரிக்கவும், வேகமாக மாறிவரும் உலகின் வாய்ப்புகளுக்கு ஏற்ப நமது இளைஞர்களைத் தயார்படுத்தும் நோக்கிலும் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

> “நமது நாட்டில் திறன் மிகு இளைஞர்கள் அதிகளவில் உள்ளனர். குறைந்த பணவீக்கம் மற்றும் பொருளாதார நிலைத் தன்மையுடன் கூடிய வலுவான வளர்ச்சியில் நாங்கள் கவனம் செலுத்தி வருகிறோம். ”



## தேர்தல் ஆணையர்கள் 5 மாநிலங்களில் நேரில் ஆய்வு

**புதுடெல்லி,பிப்.17:**

சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள மாநிலங்களில் தயார் நிலை குறித்து ஆய்வு செய்ய தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள் ஆகியோர் பயணத்தை தொடங்கியுள்ளனர்.

தமிழகம், கேரளா, மேற்கு வங்கம், அசாம் ஆகிய 4 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றில் வரும் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் சட்டப்பேரவை தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இதற்கான அறிவிப்பை தலைமை தேர்தல் ஆணையம் அடுத்த மாதம் 2-வது வாரத்தில் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில இந்த 5 மாநிலங்களிலும் சட்டப்பேரவைத் தேர்தல் தயார் நிலை குறித்து ஆய்வு செய்யும் பணியை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது. அசாம் மாநிலத்தில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் சாந்து மற்றும் விவேக் ஜோஷி தலைமையிலான குழு இன்று முதல் பிப்.18ம் தேதி வரை பயணம் செய்கிறது.

இவர்கள் மாநில தேர்தல் ஆணையர், தேர்தல் அதிகாரிகள், தலைமைச் செயலாளர், டிஜிபி, மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறை அதிகாரிகள், அரசியல் கட்சியினர் ஆகியோரை சந்தித்து ஆலோசனை நடத்துவர். இவர்கள் தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு இந்த மாதம் இறுதியில் வருவர் எனத் தெரிகிறது. மேற்கு வங்கம் மற்றும் கேரளாவில் இவர்களது பயணம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

# இலங்கைத் தமிழரை சட்டவிரோத குடியேறிகளாக கருதக் கூடாது

## பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

**சென்னை,பிப்.17:**

இந்தியாவில் 40 ஆண்டுகளுக்கு மேலாக வசித்துவரும் இலங்கைத் தமிழர்களை சட்டவிரோத குடியேறிகளாக கருதக்கூடாது. இதை மத்திய அரசு அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக கடிதத்தில் முதல்வர் கூறியிருப்பதாவது: கடந்த 1983-ம் ஆண்டு முதல், இலங்கையில் ஏற்பட்ட இனமோதல்களால் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள சொந்த மண்ணில் இருந்து வெளியேறிய இலங்கைத் தமிழர்களுக்கு தங்குமிடம், வாழ்வாதார உதவி, கல்வி, மருத்துவ வசதிகளை தமிழகம் தொடர்ந்து வழங்கி வருகிறது.

தமிழகத்தில் தற்போது 89 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் வசிக்கின்றனர். இவர்களில் கணிசமானோர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் வசிப்பவர்கள். அதிலும் 40 சதவீதத்தினர் இந்திய மண்ணிலேயே பிறந்தவர்கள். ஆனால், அவர்களுக்கு




குடியுரிமை அல்லது நீண்டகால விசா போன்ற நிலையான சட்டப்பூர்வமான தீர்வுகள் இதுவரை கிடைக்கவில்லை.

‘ஆக்கப்பூர்வ அணுகுமுறை’ - இந்த நிலையில், சமீபத்திய மத்திய அரசின் கொள்கை முன்னேற்றங்கள், குறிப்பாககுடிவரவு மற்றும் வெளிநாட்டினர் ஆணை 2025 ஆக்கப்பூர்வமான மற்றும் மனிதாபிமான நோக்கத்துடன் கூடிய அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றன. அந்த ஆணைப்படி, ‘2015 ஜன.9-ம் தேதி வரை இந்தியாவில் தஞ்சமடைந்த இலங்கைத்தமிழர்களை சட்ட விரோதமாககுடியேறியவர்களாக கருதக்கூடாது’ என்று முறையான விளக்கம் மத்திய அரசால் வழங்கப்பட வேண்டும்.

எனவே, இலங்கைத் தமிழர்களிடன் குடியுரிமை விண்ணப்பங்களை பரிசீலிக்க தடையாக உள்ள முந்தைய நிர்வாக உத்தரவை மத்திய அரசு ரத்து செய்து, தமிழக அரசால் வழங்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் நீண்டகால விசா விண்ணப்பங்களுக்கு தற்போதைய நடைமுறையில் பாஸ்போர்ட் மற்றும் விசா தேவைகளை தள்ளுபடி செய்யும் நிர்வாக விளக்கத்தை வழங்க வேண்டும். குடியுரிமை, நீண்டகால விசா விண்ணப்பங்களை விரைவாக பரிசீலித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர்களுக்கு அதிகாரம்வழங்க வேண்டும்.

இந்தியாவில் 40 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்களின் நிலையை சட்டவிரோதம் என வரையறுப்பது மனிதாபிமான சூழலை பிரதிபலிக்கவில்லை. குறிப்பாக, 2015 ஜன.9 வரைஇந்தியாவில் வசித்து வரும்இலங்கைத் தமிழர்களை சட்டவிரோதமாக குடியேறியவர்களாக கருதக் கூடாது என்ற விளக்கத்தை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவேண்டும். இந்த கருத்துகளை விரைவாக, மனிதாபிமான அடிப்படையில் பரிசீலித்து நல்ல முடிவை எடுப்பீர்கள் என நம்புகிறேன். இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

## ஜம்மு-காஷ்மீர்: பயங்கரவாதத்துடன் தொடர்புடைய 8,000 வங்கிக் கணக்குகள் முடக்கம்!




**ஜம்மு-காஷ்மீர்,பிப்.17:**

ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய நிதி மோசடியில் ஈடுபட்ட 8,000-க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டதாக அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனா.

கடந்த 3 ஆண்டுகளாக நடத்தி வரும் தொடா் சோதனையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவா்கள் தெரிவித்தனா.

இதுகுறித்து மத்திய புலனாய்வு அமைப்புகளின் அதிகாரிகள் மேலும் கூறியதாவது: கடந்த 2017-ஆம் ஆண்டு தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) மேற்கொண்ட கடும் நடவடிக்கையால் ஜம்மு-காஷ்மீருக்குள் சட்டவிரோதமாக பணம் கொண்டுவரப்படுவது முற்றிலுமாகத் தடுக்கப்பட்டது. அதன்பிறகு எண்ம ஹவாலா முறையைப் பயன்படுத்தி நாட்டுக்கு எதிரான சதிச் செயல்களில் பயங்கரவாதிகள் ஈடுபடத் தொடங்கியுள்ளனா. அதன்படி, வங்கிக் கணக்கு வைத்திருக்கும் நபா்களை அணுகி அவா்களுக்கு குறிப்பிட்ட தொகையை கமிஷனாக வழங்கி பணப் பரிவா்த்தனையை மேற்கொண்டுள்ளனா.

இதில் ஈடுபடும் மோசடியாளா் ஒருவா் சுமாராக 10 முதல் 30 வங்கிக் கணக்குகளில் பணப் பரிமாற்றத்தில் ஈடுபடுகிறாா். கமிஷன் தொகைக்காக சிலா் தங்களது வங்கிக் கணக்கின் அனைத்துத் தகவல்களையும் பயங்கரவாதத் தொடா்புடைய நபா்களிடம் வழங்காமல் இருந்தால் இந்த மோசடியை முதல்கட்டத்திலேயே தடுக்க முடியும்.

கடந்த 3 ஆண்டுகளாக நடத்திய தொடா் சோதனையில் நிதி மோசடியில் ஈடுபட்ட 8,000-க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

தில்லி குண்டுவெடிப்பு விசாரணை: அண்மையில் நன்கு படித்தவா்களைக் கொண்ட பயங்கரவாதக் குழுக்களை ஜம்மு-காஷ்மீா் காவல் துறை கண்டறிந்து கைது செய்தது. அவா்கள் அனைவரும் 2016-ஆம் ஆண்டுமுதலே பயங்கரவாத செயல்களில் ஈடுபட முயற்சிகளை மேற்கொண்டுள்ளனா். இதற்காக அவா்கள் ‘அன்சாா இன்டெரிம்’ என்ற பெயரில் பயங்கரவாத அமைப்பு ஒன்றையும் நிறுவியுள்ளனா.

தில்லியில் காா் குண்டுவெடிப்புத் தாக்குதலை நடத்தி உயிரிழந்த மருத்துவா் உமா-உன்-நபி 2016 மற்றும் 2018 என இருமுறை பயங்கரவாத அமைப்புகளில் சேர மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. இதுதொடா்பாக விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்றனா.

# விருது பெற்ற கேரள விவசாயி கடன் சுமையால் தற்கொலை

**கண்ணூர்,பிப்.17:**

கேரள மாநிலத்தில் விருது பெற்ற 62 வயது விவசாயி ஒருவர் கடன் சுமை காரணமாக தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டம் செறுபுழா அருகே உள்ள இடவரத்தைச் சேர்ந்தவர் அம்பாட்டு இலியாஸ் (62). விவசாயியான இவர் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக கண்ணூர் மற்றும் அண்டை மாவட்டமான காசர்கோடு மலைப் பகுதிகளில் உள்ள நிலத்தை குத்தகைக்கு எடுத்து காய்கறி பயிரிட்டு வந்தார்.

மேலும் மாநில அரசின் சிறந்த விவசாயிக்கான விருதையும் பெற்றுள்ளார். இந்த பருவத்தில் அவர் சுமார் 2,500 வாழைக்கன்றுகளை நட்டிருந்தார். ஆனால், எதிர்பார்த்த வருமானம் கிடைக்காததால் அவர் மிகுந்த மன உளைச்சலில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், மூன்று நாட்களுக்கு முன்பு இலியாஸ் தனது பண்ணையில் பூச்சிக்கொல்லி மருந்தைக் குடித்துவிட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் கிடந்துள்ளார்.



அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். பல லட்சம் ரூபாய் கடன் சுமை காரணமாக அவர் இந்த விபரீத முடிவை எடுத்ததாகக் சந்தேகிக்கப்படுகிறது.

## தஞ்சை ராஜராஜேஸ்வரமுடையார் சிறப்பு அலங்காரத்தில் காட்சி



தஞ்சை பெரிய கோவிலில் நேற்று (15.02.2026) சிவராத்திரி முன்னிட்டு தஞ்சை ராஜராஜேஸ்வரமுடையார் சிறப்பு அலங்காரத்தில் காட்சி. **செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

## சோலை ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பாக நடைபெற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டி




**திருப்பத்தூர் , பிப்.17:** திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி, திருமாஞ்சோலை பகுதியில் சோலை ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பாக நடைபெற்ற மாபெரும் கிரிக்கெட் போட்டியில் வாணியம்பாடி நகர கழக செயலாளர், நகர மன்ற உறுப்பினர் V.S.சாரதி குமார் BE.,MC சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு போட்டியில் வென்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். நிகழ்வில் அரசு மருத்துவர் நதீம், ஜனமே ஜெயன், வார்டு செயலாளர் இனியவன், சிவகுமார் , தமிழ், அழகிரி, கார்த்திக் , சின்னதம்பி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

## அறந்தாங்கி அரசு கல்லூரி மாணவர்களுக்கு பாராட்டு



**அறந்தாங்கி, பிப்.17:** ஆவுடையார் கோயில் அருகே பெருநாவலூரில இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு கணினி அறிவியல் பயிலும் ஆர்.ஸ்ரீதர், எஸ்.சிவானந்தம் ஆகியோர், அண்மையில் புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி கணினி பயன்பாட்டியல் துறை நடத்திய அனைத்துக்கல்லூரி மாணவர்களுக்கான சர்ப்ரைஸ் ஈவென்ட் மற்றும் மெமரி ஹன்ட் ஆகிய போட்டிகளில் பங்கு பெற்று, இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களை வென்று வந்துள்ளனர்.

இப்போட்டிகளில் 39 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் பங்கெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றி பெற்ற மாணவர்களைக் கல்லூரி முதல்வர் முனைவர் ம.துரை அவர்கள் பாராட்டினார். கல்லூரிக்கணினி அறிவியல் துறைத்தலைவர் முனைவர் து.சண்முகசுந்தரம் மற்றும் முனைவர் ப.நாராயணசாமி, வி.அங்கயற்கண்ணி, வே.வாணி ஆகிய கணினி அறிவியல் துறைப்பேராசிரியர்கள் உடனிருந்தனர்.

## நாகை மாவட்ட ரெட்கிராஸ் சார்பாக மருத்துவ உபகரணங்கள் வழங்கல்



இந்தியன் ரெட்கிராஸ் சொசைட்டி சென்னை மாநிலக்கிளை வழங்கிய, மருத்துவ உபகரணங்களான ஆக்ஸிஜன் கான்சன்டிரேட்டர், பல்ஸ் ஆக்ஸி மீட்டர் ஆகியவை அடங்கிய 15 பெட்டிகளை இன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு. ப. ஆகாஷ் அவர்கள் வழியாக மாவட்ட சுகாதார அலுவலர் Dr. பிரதீப்கிருஷ்ணகுமார் அவர்களிடம் மருத்துவமனை பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(ஊ.வ) திரு. பி. விஷ்ணுபரன், IRCS மாவட்ட சேர்மன் 'கயிலைமணி' அ. வேதரத்தினம், துணைசேர்மன் டாக்டர் வினோதினிஇராமகிருஷ்ணன்,கௌரவச்செயலாளர், தங்க. மோகன், பொருளாளர். திரு இரா. தெட்சிணாமூர்த்தி, நிருவாகக்குழ உறுப்பினர் திரு. பி. சண்முகம் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் வழங்கினர்.

## திருப்பத்தூர் மாவட்ட ஊர்க்காவல் படை அமைப்பில் ஊர்க்காவல் படையினர் தேர்வு



**திருப்பத்தூர்,பிப்.17:** திருப்பத்தூர் மாவட்ட ஊர்க்காவல் படை அமைப்பில் 08 ஆண்கள் மற்றும் 03 பெண்கள் என மொத்தம் 11 ஊர்க்காவல் படையினர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தேர்வு செய்யப்பட்ட ஊர்க்காவல் படையினருக்கு மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சியாமளா தேவி பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, பணி நியமன ஆணை பெற்ற ஊர்க்காவல் படையினருக்கு மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் 45 நாட்கள் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, பின்னர் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கோவிந்தராசு ஆயுதப் படை துணை காவல் கண்காணிப்பாளர் குமரன், மண்டல தளபதி வெங்கடேசன், ஆயுதப்படை ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நாள்தோறும் மூன்று திருக்குறள்களை வாசிக்க மாணவிகள் உறுதியேற்பு

### குறள் பயிற்சி வகுப்பில் மாணவிகள் உறுதியேற்றனர்



**நெல்லை, பிப்.17:** பாளையங்கோட்டைகுழந்தை இயேசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடந்த திருக்குறள் திருப்பணிகள் திட்ட பயிற்சி வகுப்பில் நாள்தோறும் மூன்று திருக்குறள்களை வாசிக்க மாணவிகள் உறுதியேற்றுக் கொண்டனர்.

தமிழ்நாடு முழுவதும் வாரந்தோறும் நடைபெற்று வரும் திருக்குறள் திருப்பணிகள் திட்ட நிகழ்ச்சியின் 29- ஆவது வார நிகழ்ச்சி 16.02.2026 திங்கட்கிழமை அன்று காலையில் பாளையங்கோட்டை குழந்தை இயேசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது .

திருக்குறள் திருப்பணிகள் திட்டக் கண்காணிப்புக் குழு உறுப்பினரும் பயிலரங்கக் குழுத் தலைவருமான கவிஞர் பேரா என்ற பே. இராஜேந்திரன் தலைமையுரை வழங்கினார்.

அவரது தலைமையுரையில், "பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் தாங்கள் படிக்கின்ற காலத்திலேயே திருக்குறளை முழுமையாக உள்வாங்கிக் கொள்ள வேண்டும். வள்ளுவர் தந்த 1330 குறள்களையும் முற்றோதல் செய்யும் மாணவ மாணவிகளுக்கு தமிழ் வளர்ச்சித் துறை ரொக்கப் பரிசுகள் வழங்கி சிறப்புச் சேர்த்து வருகிறது.

இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டிருக்கின்ற மாணவிகள் இச்செய்தியை அறிந்து திருக்குறளை முழுமையாக மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும். வாழ்க்கையை மேம்படுத்தும் வித்தை கொண்டது திருக்குறள்"... என கவிஞர் பேரா தனது தலைமையுரையில் தெரிவித்தார்.

அடுத்ததாக பயிற்சிக் குழுவின் பயிற்றுநர் கவிஞர் வ. பாமணி ந.வனசெல்வி ஆகியோர் குறள் உரை நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து மாணவிகளின் கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலில் சிறப்பான கருத்துக்களைச் சொன்ன மாணவிகள் கிருஷ்ண வேணி தர்ஷினி,இந்துமதி ஆகியோருக்கு பரிசுகள் வழங்கிப்பட்டது.

நாள்தோறும் மூன்று திருக்குறள்களை வாசிக்க மாணவிகள் உறுதியேற்றனர். நிறைவாக ஆசிரியை மெல்பா நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகளும் ,கணித ஆசிரியை மெல்பா,ஆங்கில ஜெயந்தி உட்பட ஆரிரியைகளும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பயிலரங்கக் குழுத் தலைவர் கவிஞர் பேரா சிறப்பாக செய்திருந்தார்.

## செங்கரைப்பாளையத்தில் மகாசிவராத்திரி விழா



**ஈரோடு,பிப்.17:** ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், துய்யம்பூந்துரைக் கிராமம், செங்கரைப்பாளையம் அறிவுத்திருக்கோவிலில் 15.02.2026 ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணி முதல் அதிகாலை 4:00 மணி வரை மகாசிவராத்திரி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. முதலில் துரிய தவம் நடத்தப்பட்டு விழா தொடங்கப்பட்டது. அறக்கட்டளை தலைவர் V.பொன்னுசாமி அவர்கள் தலைமை தாங்கினார். குளூர் ஊராட்சி முன்னாள் தலைவர் G.செல்வராஜ் அவர்கள் முன்னிலை வகித்தார். விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் செயலாளர் S.கிருஷ்ணன் அவர்கள் வரவேற்றார். திருப்பூர் மாவட்ட கூடுதல் நீதிபதி அருள்நிதி D.பாலு அவர்கள் ஐம்புலன்களின் அரசாட்சி என்னும் சிறப்பு சிந்தனை விருந்து வழங்கி, பஞ்சேந்திரிய தவமும் நடத்தினார். சிவபுராணம், சிவராத்திரியின் முக்கியத்துவம், மனவளக்கலை பயிற்சியின் பலன்கள், முறையோடு வாழ உதவும் மனவளக்கலை என்னும் பலதலைப்புகளில் M.மணி(VAO), சுந்தரம் , C.சித்ரா, A.ராஜலட்சுமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இரவு 1.00 மணிக்கு சிறப்பு பஞ்சபூத நவக்கிரக தவமும், அதிகாலை 3.00 மணிக்கு சர்வ வசிய தன ஆகர்சன சங்கல்பமும் பேராசிரியர் R.பாலமுருகன் அவர்கள் நடத்தினார். அறங்காவலர்கள் S.சுந்தரமூர்த்தி, S.பூசப்பன் மற்றும் மனவளக்கலை அன்பர்கள் R.தர்மலிங்கம், M.பாலசுப்ரமணியன் பேராசிரியர் K.பூமலர் ஆகியோர் விழா ஏற்பாடுகளை முன்னின்று செய்தனர். பக்கத்து கிராமங்களில் இருந்து ஆண்கள் பெண்கள் என இருபால் அன்பர்கள் எனத் திரளான மக்கள் ஆர்வத்துடனும் , ஈடுபாட்டுடனும் மகிழ்வுடன் கலந்து கொண்டனர். அறக்கட்டளை பொருளாளர் C.மனோகரன் அவர்கள் நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது நன்றி! வணக்கம்!

## அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி உடனமர் சுந்தரேசுவரர் திருக்கோவிலில் மாசி மாதம் சிவராத்திரி விழாவில் சிறப்பு அபிஷேகம்



**திருவண்ணாமலை,பிப்.17:** மாசி மாதம் மகா சிவராத்திரியை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் பேரூர் அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி உடனமர் சுந்தரேசுவரர் திருக்கோவிலில் மாசி மாதம் சிவராத்திரி விழாவில் காலை மற்றும் மாலை சிறப்பு அபிஷேகம் தொடர்ந்து சிவராத்திரி நான்கு கால சிறப்பு அபிஷேகம் பால், தயிர், அரிசிமாவு, வில்வப்பொடி, மஞ்சள், சந்தனம், விபூதி, பன்னீர், ரிஷிகேஷில் இருந்து வரவழைக்கப்பட்ட கங்கைநீர், பஞ்சாமிர்தம்,தேன், இளநீர், கரும்புச்சாறு பதினாறு வகை அபிஷேகங்கள் அனைத்து பூஜைகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ வீரட்டேசுவரருக்கு நள்ளிரவு சிவராத்திரி வேளையில் பதினாறு வகை வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள் வருடத்திற்கு ஒருமுறை நிகழும் கம்பளி சாற்றி நெய் மற்றும் வெந்நீர் அபிஷேகமும் நடைபெற்றது.

இவ்விழாவில் சுமார் 2000க்கும் மேற்பட்ட பக்தர்கள் இரவு முழுதும் விரதம் தொடர்ந்து அன்னதானமும் ஒவ்வொரு காலபூஜை வெகு சிறப்பாக நடைபெற்றது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மஹா சிவராத்திரி முன்னிட்டு ருத்ரயாகம் சிறப்பு வழிபாடு



**கடலூர், பிப்.17:** கடலூர் மாவட்டம் புவனகிரி கடைவீதி ஆர்ய வைஸ்ய ஸ்ரீ பாண்டுரங்கர் பஜனை மடத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மீனாட்சி சமேத ஸ்ரீசுந்தரேஸ்வரருக்கு கலச ஸ்தாபனம், விக்னேஸ்வர பூஜை, அபிஷேகங்கள், ருத்ர பாராயணமும், 108 சங்கு பூஜைகளும் அதனைத் தொடர்ந்து ருத்ர மஹாயாகமும், வண்ணமலர் மாலைகளால்,ருத்ராட்ச மாலைகளால் அலங்கரிக்கப் பட்டு, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது.

மாலை 4 மணிக்கு (போளூர்)சங்கீதா கார்த்திகேயன் அவர்களின் தில்லை ஸ்ரீசிவகாமி மாதங்கி நாட்டியாலயா நிகழ்ச்சி மாணவிகளுக்கு நாட்டியஞ்சலி சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

மஹாசிவராத்திரி உபயம் ஆர்ய வைஸ்ய விபாக், புவனகிரி. ஆர்ய வைஸ்ய சிவன் பொது புவனகிரி. ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் பூஜைகளில் கலந்து கொண்டு வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் மூன்று வேளையும் உணவு வழங்கப்பட்டது. வெகு சிறப்பாக பூஜைகளும் நடைபெற்றது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## மயிலாடுதுறையில் மகாசிவராத்திரியை முன்னிட்டு 20-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி



**மயிலாடுதுறை, பிப் .17 :** மயிலாடுதுறையில் மகா சிவராத்திரியை முன்னிட்டு சப்தஸ்வரங்கள் அறக்கட்டளையின் சார்பில் 20-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழா அருள்மிகு மயூரநாதர் ஆலயத்தில் நடைபெற்றது.

சப்தஸ்வரங்கள் அறக் கட்டளை அறங்காவலர் குழு தலைவர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். அறங்காவலர் குழு துணை தலைவர் சிவலிங்கம், அறங்காவலர்கள் சங்கரி பரசுராமன், தொழிலதிபர்கள் அழகேசன், ஏ ஆர்சி குருகோவிந்த், ஏசிடி செந்தில்குமார், கங்காதர், திரை இயக்குநர் மணிவண்ணன், ரோட்டரி சங்க தலைர் அய்யாசாமி, பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் விஜயபாஸ்கரன், மருத்துவர்கள் ராதை பிரசன்னவதனன், பரணிதரன், சரிதா, சிவபுரம் வேதசிவாகம பாடசாலை சுவாமிநாத சிவச்சாரியார், கீழையூர் செந்தில், சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை தலைவர் இசைக்கலைமணி பரணிதரன், அறக்கட்டளை செயலாளர் வாத்திய கலைமணி மாயவரம் விஸ்வநாதன், துணை செயலாளர் அகஸ்டின் விஜய், பொருளாளர் ராமன், நிர்வாகிகள் சிவக்குமார், ஹரிஹரன், அரவிந்த், அகோரம், அருணா, பவித்ரா, மகாலெட்சுமி, சுரேஷ், மோகன்ராஜ், ஞானம், சூர்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

20-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழாவில் சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் கலை மற்றும் இசைத் துறையில் சிறந்து விளங்கி வரும் தேனி சுபஸ்ரீ சசிதரனுக்கு மயூர நாட்டிய தாரகை விருதும், புதுவை பாலாஜி ராம்ஜிக்கு மயூர கான கலைமணி விருதும் வழங்கி பாராட்டப்பட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற மகா சிவராத்திரி மயூர நாட்டியாஞ்சலி விழாவில் கோவை ஸ்ரீகார்த்திகேயா நாட்டியப்பள்ளி, லண்டன் சேஷா நாட்டிய நிக்கேதன், சென்னை நிருத்யோபாசனா பரதநாட்டியம் கலை நிலையம், மலேசியா ஸ்ரீசங்கர் கந்தசுவாமி, தேனி ப்ரஜ்னா ஸ்கூல் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ், கோவை ஸ்ரீ அபிராமி நாட்டியாலயா, பெங்களூர் வைஷ்ணவி நாட்டியஷாலா, மலேசியா லாஸ்யா ஆர்ட்ஸ், ஸ்ரீலங்கா அபிநயா க்ஷேத்ரா, சென்னை நிருத்யபாயாசா ஸ்கூல் ஆஃப் கிளாசிக்கல் டான்ஸ் மியூசிக், கோவை சாத்விகா ஸ்கூல் ஆஃப் டான்ஸ், செங்கல்பட்டு விநாயகா நாட்டியாலயா உள்ளிட்ட குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இதில் ஏராளமான நாட்டியக் கலைஞர்கள், இசைக்கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர்.

மகா சிவராத்திரியை முன்னிட்டு நான்கு நாட்கள் நடைபெற்ற 20-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழாவிற்கான ஏற்பாடுகளை சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை அறங்காவலர்கள் மற்றும் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# கவிதை அரங்கம்!





தன்னம்பிக்கை இன்றி
எதுவும் செய்ய இயலாது
உங்களுக்கு உங்களின்
மீது
நம்பிக்கை இருந்தால்
உங்கள் கிரீடங்களை
யாராலும் பறிக்க முடியாது

கவலைகளை
நிரந்தரமாக்கினால்
நீ நோயாளி
தற்காலிகமாக்கினால்
நீ புத்திசாலி

வெற்றியாளர்கள்
தோல்வியை
எற்று கொண்டதில்லை
எற்றுக் கொள்பவர்கள்
வெல்வதில்லை

உறுதியான முடிவும்
உறுதியான முயற்சியும்
இருந்தால் அதன்
பெயர் தான் வெற்றி

## வாழ்க்கை தத்துவம்...



தோல்வி வந்தால்
அது நிறுத்தம் அல்ல
மறுபடியும் தொடங்கும் சிக்னல்

வாழ்வின் மகிழ்ச்சி
எவ்வளவு பெற்றோம் என்பதிலல்ல
எவ்வளவு பகிர்ந்தோம் என்பதில்

சிரிப்பு இல்லாத வாழ்க்கை
மணம் இல்லாத மலரைப் போன்றது

வாழ்வின் அழகு
சிறிய தருணங்களை
பெரிதாக உணர்வதில்தான் உள்ளது

வாழ்வின் அழகு
நிறைவு பெற்றதில் இல்லை
தேடிக் கொண்டிருப்பதில் தான்

வாழ்வின் அழகு
சின்ன சின்ன தருணங்களில்
மறைந்து கிடக்கிறது

# லவ் இஸ் ஆல்வேஸ் லவ்



ராகுல் வேலை முடிந்து வீடு வந்ததும், சோர்வாக நாற்காலியில் அமர்ந்து தொலைக்காட்சியைப் போட்டான். இயந்திரத்தனமாகத் தனது கைபேசியை எடுத்து முகநூலைத் திறந்தபோது, ஒரு செய்தி அவனது கவனத்தை ஈர்த்தது. அறியாத ஒரு பெயரிலிருந்து வந்திருந்த அந்தச் செய்தி: "ஹலோ... எப்படி இருக்கீங்க?". ராகுலுக்குப் புரியவில்லை. "யார் நீங்கள்? நான் நலமாக இருக்கிறேன்," என்று பதில் அனுப்பினான். அடுத்த நொடியே, "நான் சிந்து" என்ற பதில் வந்தது. அதைப் பார்த்ததும் ராகுலின் உடலில் ஒரு மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு தன்னுடன் பணிபுரிந்த சிந்துவை அவனுக்கு மிகவும் பிடிக்கும். அப்போதெல்லாம் அவளிடம் மிகுந்த உரிமையுடன் 'டார்லிங்', 'டியர்' என்று அழைப்பான். ஆனால், சிந்து ஒருபோதும் அவனிடம் ஒரு எல்லை தடையைத் தாண்டிப் பேசியதில்லை. தற்போது பழைய நினைவுகள் முட்டி மோத, அந்த நாட்கள் அவன் நினைவுக்குள் வந்தது.

எப்போதும் அவளுக்கு குறும் செய்தி அனுப்பிக்கொண்டே இருப்பான் ராகுல்

ராகுல் மெதுவாகத் தட்டச்சு செய்தான்: "நான் உன்கிட்ட ரொம்ப உரிமை எடுத்துக்கிறேன். உனக்கு கோபம் வரலையா?".

"இல்லை, கோபம் வரவில்லை. உங்கள் மேல் பாவமாகத்தான் இருக்கிறது. சக மனிதருக்கு மரியாதை கொடுத்துப் பேசத் தெரியாத ஒருவராக இருக்கிறீர்களே," என அவள் பதிலளித்தாள்.

ராகுல் தன் மனதில் இருந்த காதலைச் சொல்லத் துணிந்தான். "நான் உன் மேல் மரியாதை வைக்காமல் இல்லை மாறாக நான் உன் மேல் வைத்திருக்கும் அன்பினால் அப்படிப் பேசுகிறேன். உன்னை இனிமேல் 'மனைவி' (WIFE) என்று அழைக்கலாமா?" என்று கேட்டுச் செய்தியை அனுப்பினான். அதற்குப் பின் சிந்து பல செய்திகளை தட்டச்சு செய்வதும் பின் அதனை அழிப்பதும் தட்டச்சு செய்வதும் அளிப்பதுமாகவே தெரிந்தது பதில் வரும் என காத்திருந்து காத்திருந்து ராகுல் ஃபோனை கட்டிலில் படுத்தான் சிந்துவும் ஆஃப்லைன் சென்றிருந்தாள்.

ராகுலுக்குத் தூக்கமே வரவில்லை. நள்ளிரவில் வாட்ஸ்அப்பில் ஒரு செய்தி வந்த சத்தம் கேட்டது. சிந்துதான் அனுப்பியிருந்தாள். ஆனால், அவன் அச்செய்தியைத் திறப்பதற்குள், அவள் அதை 'டெலிட் எவரிஒன்' (DELETE FOR EVERYONE) செய்திருந்தாள். மறுநாள் அவளை நேரில் சந்தித்துப் பேச முயன்றான். ஆனால், அவள் அன்றே பணியை விட்டு நின்றுவிட்டாள். அலைபேசி அணைக்கப்பட்டிருந்தது, முகவரியும் இல்லை.

"என்னங்க... அப்படி என்ன யோசனை?" என்ற குரல் கேட்டு ராகுல் சுயநினைவுக்கு வந்தான். அவனது மனைவி அவன் தோளில் கை வைத்து நின்றிருந்தாள். "இப்போ உனக்கு மெசேஜ் பண்ணிருந்தது பழைய சிந்து இல்ல. வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் ஹவுஸ் ஓனர் மேடம். அவங்க பேரும் சிந்துதான். உன் டிபார்ட்மெண்ட் சம்பந்தமா ஏதோ டவுட்னு சொன்னாங்க," என்றாள் மனைவி.

"என்ன டவுட்?" என்று ராகுல் கேட்டான். "அது அப்புறம் பேசிக்கலாம்.. சாப்பிட வாங்க. இன்னைக்கு பிப்ரவரி 14... எனக்கு என்ன கிஃப்ட் தரப்போறீங்க?" என மனைவி அன்புடன் கேட்டாள்.

அவளை அணைத்துக் கொண்டு வாழ்த்துகளைச் சொன்னாலும், ராகுலின் மனம் அடங்கவில்லை. ஹவுஸ் ஓனர் சிந்து என்ன உதவி கேட்டார் என்று பார்ப்பதற்காக மறுபடியும் கைபேசியை எடுத்துப் பார்த்தான். அங்கேயும் ஏதோ தட்டச்சு செய்யப்பட்டு, பின் 'டெலிட் எவரிஒன்' செய்யப்பட்டிருந்தது. ராகுல் மறுபடியும் சிந்தனையில் மூழ்கினான். இந்த சிந்து யார்? பழைய சிந்துவா? அல்லது ஹவுஸ் ஓனர் சிந்துவா?

"டெலிட் எவ்ரி ஒன்... குறும் செய்திகளுக்குச் செய்யலாம். ஆனால் நினைவுகளை டெலிட் எவரிதிங்' செய்ய முடியவில்லையே!" என தன் மனதுக்குள் நினைத்தபடி, மீண்டும் சோபாவில் சாய்ந்தான் ராகுல்.

ஜனனி அந்தோணி ராஜ்
திருச்சிராப்பள்ளி

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



"எம்பிளாய்மெண்ட் ஆபிசிலே நீ பதியறதுக்கு, உன்னோட அப்பா, தாத்தாவையும் கூட்டிட்டு வந்திருக்கியே! ஏன்?"

"அப்பாவுக்குப் புதுப்பிக்கணும்... எங்க தாத்தாவுக்கு முதல் இண்டர்வியூ வந்திருக்கு!"



# தினம் ஒரு சமையல்



## கருணை கிழங்கு வறுவல்

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| கருணை கிழங்கு (தோல் நீக்கியது) | - 1/4 கிலோ |
| புளி | - சிறிய அளவு |
| உப்பு | - தேவையான அளவு |
| மிளகாய் தூள் | - தேவையான அளவு |
| எலுமிச்சம் பழச்சாறு | - 1 ஸ்பூன் |
| மஞ்சள் தூள் | - 1/4 ஸ்பூன் |
| தண்ணீர் | - 2 ஸ்பூன் |

**செய்முறை:**



கருணை கிழங்கை தோல் சீவி, சிறு சிறு துண்டுகளாக நீள வாகில் வெட்டி கொள்ளவும்.

பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி, இந்த வெட்டிய கிழங்கு துண்டுகளை சேர்த்து 80% வரை வேக வைக்கவும்.

சிறிது ஆறிய பின், கிழங்கில் உப்பு,மஞ்சள் தூள்,மிளகாய் தூள்,புளி தண்ணீர்,சேர்த்து நன்றாக பிரட்டி, 10 நிமிடம் ஊற வைக்கவும்.

புளி தண்ணீர் சேர்ப்பது கட்டாயம், ஏனெனில், இந்த கிழங்கு வகை நாக்கில் அரிப்பு தன்மை ஏற்படுத்த கூடியது. புளி தண்ணீர் இல்லாதவர்கள், எலுமிச்ச பழ சாறு சேர்த்து கொள்ளலாம்.

பிறகு, ஒரு தோசை கல்லில், நன்றாக எண்ணெய் ஊற்றி, ஊற வைத்த கிழங்குகளை போட்டு மொறு மொறு என வறுத்து எடுக்கவும்.

# மருதாணி பயன்கள்



மருதாணி (HENNA) குளிர்ச்சி, கிருமிநாசினி, மற்றும் அழற்சி எதிர்ப்பு பண்புகளைக் கொண்ட ஒரு சிறந்த மூலிகை ஆகும். உடல் வெப்பத்தைத் தணித்து, மன அழுத்தத்தைக் குறைத்து, தலைவலி மற்றும் கைகால் எரிச்சலுக்கு நிவாரணம் அளிக்கிறது. நகச்சுத்தி, தோல் நோய்களை குணப்படுத்துவதோடு, கூந்தல் வளர்ச்சியை ஊக்குவித்து, நரைமுடியை மறைக்க இயற்கைச் சாயமாகவும் பயன்படுகிறது.

மருதாணியின் முக்கிய மருத்துவ மற்றும் அழகுப் பயன்கள்:

உடல் குளிர்ச்சி: மருதாணி இலைகளை அரைத்து உள்ளங்கை மற்றும் உள்ளங்கால்களில் தடவுவதன் மூலம் உடல் சூடு தணியும், மன அமைதி கிடைக்கும்.

கூந்தல் பராமரிப்பு: இது தலைமுடியை கண்டிஷனிங் செய்து, பொடுகைக் குறைத்து, நரைமுடியை இயற்கை கரும்பழுப்பு நிறமாக மாற்ற உதவுகிறது.

சருமப் பாதுகாப்பு: நகச்சுத்தி (NAIL INFECTION) வராமல் தடுக்கும் கிருமிநாசினியாக செயல்படுகிறது. புண், அலர்ஜி, மற்றும் தோல் எரிச்சல் உள்ள இடங்களில் அரைத்து பூசுவது நல்லது.

வலி நிவாரணி: தலைவலி, கை கால் வலி மற்றும் மூட்டு வலிக்கு மருதாணி அரைத்து பற்று போடுவது நிவாரணம் தரும்.

கண் எரிச்சல்: கண்களில் எரிச்சல் இருந்தால், மருதாணி இலையை அரைத்து பாதங்களில் பூசலாம்.

மருத்துவப் பயன்பாடு: இலைகள் மட்டுமல்லாது பூ, வேர், விதை ஆகியவையும் மருத்துவ குணங்கள் கொண்டவை; பட்டை தோல் சம்பந்தமான நோய்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

குறிப்பு: மருதாணியை வெளிப்புற பயன்பாட்டிற்கு (பூசுவதற்கு) மட்டுமே பயன்படுத்த வேண்டும்; உட்கொள்வது ஆபத்தானது.

மருதாணி இலையை அரைத்து, உள்ளங்கை, உள்ளங்காலில் பூசிக்கொள்ளலாம். கண் எரிச்சல், கை, கால் எரிச்சல் குணமடையும்.

மருதாணி மிகவும் குளிர்ச்சியானது, உடல்சூட்டைத் தணிக்க வல்லது. மருதாணியை பயன்படுத்தும்போது சிலருக்கு அந்தக் குளிர்ச்சி உடலுக்கு ஒவ்வாமல் போகலாம் என்பதால், பாதாம் பிசின் கலந்து பயன்படுத்தலாம்.

மருதாணியின் இலை, பூ, பட்டை என, அனைத்துப் பகுதிகளுமே மருத்துவக் குணம் வாய்ந்தவை. வாதக்குடைச்சல், தலைவலி, கைகால் வலி, எரிச்சல், அலர்ஜி போன்ற பிரச்னைகளுக்கு, மருதாணி நல்ல தீர்வைத் தரும். சருமப் பிரச்னை உள்ளவர்கள் அதிகமாகப் பயன்படுத்தலாம்.

மருதாணி இலைச்சாறு, தண்ணீர், சர்க்கரையைக் கலந்து குடித்து வந்தால், விந்து எண்ணிக்கை பெருகும்.

நகப்புண், நகச்சுத்தி பாதிப்புகளுக்கு, மருதாணி இலைகளை அரைத்து, அதன் மேல் கட்டினால், விரைவில் குணமாகும்.

மருதாணி இலையைத் தண்ணீரில் ஊறவைத்து, மறுநாள் வடிகட்ட வேண்டும். இதை, 'இலை ஊறல் குடிநீர்' என்பர். இந்த நீரைத் தொடர்ந்து 20 நாள்கள் குடித்துவந்தால் மேகச்சொறி, படை நீங்கும். பேதி, சீதபேதி கட்டுப்படும்.

# மாடியில் இருந்து விழுந்த மகள், ரத்தம் கொட்ட... மோசமாக சம்பவம் குறித்து ஜித்தன் ரமேஷ்




தமிழ் சினிமாவின் பிரபல தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரியின் 3வது மகன் என்ற அடையாளத்துடன் நடிகராக என்ட்ரி கொடுத்தவர் தான் ரமேஷ்.

இவர் முதன்முறையாக ஜித்தன் படம் மாபெரும் வெற்றியடைய ஜித்தன் ரமேஷ் என அழைக்கப்பட்டார். இவர் தொடர்ந்து படங்களில் நடித்து வந்தாலும் இவருக்கான வரவேற்பு சரியாக கிடைக்கவில்லை என்று தான் கூற வேண்டும்.

சமீபத்தில் ஒரு பேட்டியில், படங்களில் நடிக்க வேண்டும் என்பதற்காக இயக்குனர் யார், என்ன கதை என எதைப்பற்றியும் யோசிக்காமல் அடுத்தடுத்து பல படத்தில் நடித்தது தான் நான் செய்த மிகப்பெரிய தவறு, அதுதான் என் மார்க்கெட் போவதற்கு காரணமாக அமைந்துவிட்டது என்றார்.

பின் அந்த பேட்டியில் ஜித்தன் ரமேஷ் தனது மகள் குறித்து பேசியுள்ளார். அதில் அவர், என் மகள் என்றால் எனக்கு உயிர், மகள் தான் பிறக்க வேண்டும் என நான் ரொம்பவும் ஆசைப்பட்டேன். என் மகளுக்கு 2 வயது இருக்கும்போது அவள் மாடியில் இருந்து விழுந்துவிட்டார். விழுந்ததில் தலையில் அடிபட்டு, முகத்தில் அடிபட்டு ரத்தமாக கொட்டுகிறது. 3, 4 ஆம்புலன்ஸ் ஏறி இறங்கி மருத்துவமனை மருத்துவமனையாக சென்றேன்.

அந்த சம்பவத்தை என்னால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை, என் வாழ்வில் நான் மறக்க வேண்டும் என நினைக்கும் ஒரே விஷயம் இதுதான் என ஜித்தன் ரமேஷ் பேட்டியில் கூறியுள்ளார்.






இன்ஸ்டாகிராமில் 1.4 மில்லியன் பாலோவர்களை கொண்டுள்ள நடிகை நேஹா ஷெட்டி, தற்போது ரோஜாக்களுடன் எடுத்துக்கொண்ட தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். இந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன. இதோ அந்த புகைப்படங்கள்:

# 3 நாட்களில் மை லார்ட் படம் செய்த வசூல்.. எவ்வளவு தெரியுமா



எளிய மக்களின் வாழ்க்கையில் நடக்கும் அரசியலை தனது படங்கள் மூலம் தொடர்ந்து பேசி வருபவர் இயக்குநர் ராஜுமுருகன்.

குக்கூ, ஜோக்கர், ஜிப்ஸி, ஜப்பான் ஆகிய படங்களை இயக்கிய இவர் இயக்கத்தில் கடந்த வாரம் வெளிவந்த படம்தான் மை லார்ட்.

கிட்னி திருட்டு மற்றும் மனிதநேயத்தை பற்றி பேசிய இப்படத்திற்கு விமர்சன ரீதியாக அமோக வரவேற்பு கிடைத்துள்ளது.

மேலும், ஜப்பான் படத்தில் சற்று பின்னடைவை சந்தித்த ராஜுமுருகன், மை லார்ட் படத்தின் மூலம் கம்பேக் கொடுத்துள்ளார் என ரசிகர்கள் கூறி வருகிறார்கள்.

இந்த நிலையில், 3 நாட்களில் மை லார்ட் படம் செய்துள்ள வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் 3 நாட்களில் உலகளவில் ரூ. 1.4 கோடி வசூல் செய்துள்ளது.

# திருமணத்தின் போது அக்னியை சுற்றி ஏழு அடிகள் நடப்பதற்கு என்ன பொருள்?

சம்ஸ்கிருதத்தில் இதை'சப்தபதி'என்று கூறுவார்கள்.

அதாவது ஏழு அடிகள் மாப்பிள்ளையும் மணப்பெண்ணும் சேர்ந்து நடந்து வருவதாகும். அவ்வாறு ஏழு அடிகள் நடக்கும் போது மாப்பிள்ளை பெண்ணிடம் இறைவன் உனக்கு துணையிருப்பான் என்று கீழ்கண்டவாறு தனது பிரார்த்தனையைச்சொல்கிறான் !

"முதல் அடியில் : பஞ்சமில்லாமல் வாழ வேண்டும்"

"இரண்டாம் அடியில் : ஆரோக்கியமாக வாழ வேண்டும்"

"மூன்றாம் அடியில் : நற்காரியங்கள் எப்பொழுதும் நடக்க வேண்டும்"

"நான்காவது அடியில் : சுகத்தையும் , செல்வத்தையும் அளிக்க வேண்டும்"

"ஐந்தாவது அடியில் : லக்ஷ்மி கடாக்ஷம் நிறைந்து பெற வேண்டும்"

"ஆறாவது அடியில் : நாட்டில் நல்ல பருவங்கள்நிலையாக தொடர வேண்டும்"

"ஏழாவது அடியில் : தர்மங்கள் நிலைக்க வேண்டும்"

என்று பிராப்திப்பதாக சொல்லப்படுகிறது. இந்த சம்பிரதாயத்தில்மனிதர்களிடம் இருக்கும் மிகவும் சூக்ஷமமான



மனோவியல் விசயத்தை இந்து தர்மத்தில் உணர்த்தியுள்ளார்கள் நம் முன்னோர்கள்.

இரண்டு நபர்கள் ஒன்றாக ஏழு அடிகள் நடந்தால் அவர்களுக்குள் சினேகிதம் உண்டாகும் என்பது சாஸ்திரம்.

உதாரணமாக நாம் சாலையில் நடக்கும் போது அறிமுகமில்லாத ஒருவரை கடக்கும் போது சில விநாடிகள் ஒன்றாய் நடக்க நேர்ந்தால் நன்றாக கவனியுங்கள். ஏழு அடிகள் நடப்பதற்குள் நாம் அவர்களை வேகமாக தாண்டிவிடுவோம் அல்லது அவர்களைமுன்னே போகவிட்டுவிடுவோம். முழுமையாக ஏழு அடிகள் ஒன்றாக நடக்க மாட்டோம்.

இரண்டு மனிதர்கள் ஒன்றாக நடக்கும் போது அவர்களுக்குள் நடக்கும் மனோவியல் மாற்றங்கள் ஏழு அடிகளுக்குள்ளாக நடந்து விடும் என்பது ஒரு சூக்ஷமமான விஷயம்.

இதை மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து "நம் இந்து தர்மத்தில்" அதை ஒரு சம்பிரதாயமாக வைத்திருப்பதை நாம் அனுபவித்து உணர வேண்டும். இந்து தர்மத்தில் எதுவும் மூடநம்பிக்கை இல்லை. பல நுணுக்கமான அறிவியல் மனோவியல்விஷயங்கள் நிறைந்தது இந்து தர்மம்.

முனைவர்
**இராம.வேதநாயகம்**

# தினம் ஒரு தலைவர்கள் உஷா மேத்தா வரலாறு

உஷா மேத்தா (25 மார்ச் 1920 11 ஆகஸ்ட் 2000 அவர்கள் காந்தியவாதி மற்றும் இந்திய சுதந்திர போராட்ட வீரர். காங்கிரஸ் வானொலி ஊடாக இன்றும் நாட்டு மக்களுக்கு அறியப்படுகிறார், அந்த வானொலிக்கு இன்னொரு பெயர் மறைமுக காங்கிரஸ் வானொலி, பிரித்தானிய அரசின் அனுமதி இன்றி, மறைமுகமான இடத்தில் இருந்து இந்த வானொலி, நிலையம் ஒலிபரப்பாகியது. வெள்ளையனே வெளியேறு (1942), காலகட்டத்தில் இந்த வானொலி சிற்றலையில் ஒலிபரப்பியது. 1998ல், இந்திய அரசு இவருக்கு பத்ம விபூசன், எனும் நாட்டின் இரண்டாவது பெரிய விருதினை வழங்கி சிறப்பித்தது.

தொடக்க வாழ்க்கை உஷா சரஸ் எனும் கிராமத்தில் சூரத் குஜராத் இல் பிறந்தார். அவருக்கு ஐந்து வயதாக இருந்தபோது, அகமதாபாத் இல் தனது ஆசிரமத்தை பார்வையிடும்போது உஷா முதலில் காந்தி ஐச் சந்தித்தார். சிறிது நாட்களுக்குப் பிறகு, காந்தி அவரது கிராமத்திற்கு அருகில் ஒரு முகாம் ஏற்பாடு செய்தார், அதில் குழந்தை உஷாவும் பங்கேற்றார், பல அமர்வுகளிலும் கலந்து கொண்டார். மேலும் அங்கே பருத்தி நூற்பும் செய்தார். உஷாவின் ஆரம்ப பள்ளிப்படிப்பினை கெடா மற்றும் பருச்சிலும் பின்னர் பம்பாயின் சந்தரம்ஜி உயர்நிலைப் பள்ளியிலும் பயின்றார். இவர் படிப்பில் சராசரி மாணவியாக இருந்தார். 1935 ஆம் ஆண்டில், இவரது மெட்ரிகுலேஷன் தேர்வுகளில் வகுப்பில் முதல் 25 மாணவர்களில் முதல் இடம் பிடித்தார். மும்பாயில் உள்ள வில்சன் கல்லூரி இயில் தனது கல்வியைத் தொடர்ந்தார், 1939 இல் தத்துவத்தில் முதல் வகுப்பு பட்டம் பெற்றார். இவர் அதன் பின் சட்டம் படிக்கத் தொடங்கினார், ஆனால் 1942 ஆம் ஆண்டில் தனது படிப்பை முடித்துவிட்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் இணைந்தார். அப்பொழுது அவருக்கு வயது, 22. அதன் பின் முழுநேர சுதந்திர போராட்ட இயக்கத்தில் பங்கேற்றார்.

சுதந்திர போராட்ட இயக்கத்தில் பங்கு ஆகஸ்ட் 14, 1942 இல், உஷாவும் அவரது நெருங்கிய கூட்டாளிகளும் இரகசிய காங்கிரஸ் வானொலியைத் தொடங்கினர், இது ஒரு இரகசிய வானொலி நிலையம். இது ஆகஸ்ட் 27 அன்று தனது முதல் ஒலிபரப்பினை செய்தது. அவரது குரலில் ஒலிபரப்பப்பட்ட முதல் சொற்கள்: "நீங்கள் கேட்டுக் கொண்டு இருப்ப காங்கிரஸ் வானொலியாகும் [இந்தியாவில் இருந்து சிற்றலை வரிசை 42.34 மீட்டரில் ஒலிபரப்புகிறது"



இந்த வானொலியை ஒலிபரப்ப விதல்பாய் ஜாவேரி, சந்திரகாந்த் ஜாவேரி, பாபுபாய் தாக்கர் மற்றும் சிகாகோ வானொலியின் உரிமையாளர் நங்கா மோத்வானி ஆகியோர் உதவி செய்தனர்.

டாக்டர் ராம் மனோகர் லோஹியா, அச்சியூத்ராவ் பட்வர்தன் மற்றும் புருஷோத்தம் திரிகம்தாஸ் உள்ளிட்ட பல தலைவர்களும் இரகசிய காங்கிரஸ் வானொலிக்கு உதவினர். வானொலி ஒலிபரப்பு காந்தி மற்றும் இந்தியா முழுவதும் உள்ள பிற முக்கிய தலைவர்களிடமிருந்து செய்திகளைப் பதிவு செய்து ஒலிபரப்பியது. பிரித்தானிய அதிகாரிகளைத் தவிர்ப்பதற்காக, அதன் அமைப்பாளர்கள் கிட்டத்தட்ட தினமும் வானொலி நிலையத்தின் இடத்தினை மாற்றினர். ஆனால், 1942 நவம்பர் 12 ஆம் தேதி காவல்துறையினர் அவர்களைக் கண்டுபிடித்து உஷா மேத்தா உள்ளிட்ட அமைப்பாளர்களை கைது செய்தனர். அனைவரும் பின்னர் சிறையில் அடைக்கப்பட்டனர். இரகசிய காங்கிரஸ் வானொலி மூன்று மாதங்கள் மட்டுமே இயங்கினாலும், பிரித்தானிய கட்டுப்பாட்டில் உள்ள இந்திய அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட தணிக்கை செய்யப்படாத செய்திகள் மற்றும் பிற தகவல்களை பரப்புவதன் மூலம் இது சுதந்திர போராட்ட இயக்கத்திற்கு பெரிதும் உதவியது. இரகசிய காங்கிரஸ் வானொலியும் சுதந்திர இயக்கத்தின் தலைவர்களை பொதுமக்களுடன் தொடர்பில் வைத்திருந்தது. அந்த நாட்களை நினைவூட்டிய உஷா மேத்தா, சீக்ரெட் காங்கிரஸ் வானொலியுடனான தனது ஈடுபாட்டை தனது "மிகச்சிறந்த தருணமும் அது தான்" என்றும், என்றும் விவரித்தார்.

சுதந்திரத்திற்குப் பிந்தைய காலம் சிறைவாசத்திற்குப் பிறகு, உஷாவின் உடல்நிலை மோசமானது, இதனால் அரசியல் மற்றும் சமூகப் பணிகளில் பங்கேற்க் முடியவில்லை. இந்தியா சுதந்திரம் பெற்ற அன்று, உஷா மேத்தா மருத்துவ படுக்கையில் இருந்தார், இதனால் புதுதில்லியில் நடைபெற்ற உத்தியோகபூர்வ சுதந்திர விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை. பின்னர் அவர் தனது கல்வியை மீண்டும் தொடங்கினார். காந்தியின் அரசியல் மற்றும் சமூக சிந்தனை குறித்து முனைவர் பட்ட ஆய்வினை செய்தார். மும்பை பல்கலைக்கழகத்துடன் அவர் தொடர்பு கொண்டிருந்தார்: ஒரு மாணவராக, ஆராய்ச்சி உதவியாளராக, விரிவுரையாளராக, பேராசிரியராக, இறுதியாக குடிமை மற்றும் அரசியல் துறையின் தலைவராக உயர்ந்தார். இவர் பம்பாய் பல்கலைக்கழகத்தில் இருந்து 1980 ல் ஓய்வு பெற்றார்.

இந்திய அரசின் உயர்ந்த விருதான பத்ம விபூஷன் 1998 இல் இவருக்கு வழங்கப்பட்டது. பரணிடப்பட்டது 2017-10-19 AT THE வந்தவழி இயந்திரம் இந்தியாவின் இரண்டாவது மிக உயர்ந்த சிவில் விருதாக இது கருதப்படுகிறது.

கடைசி காலம் ஆகஸ்ட் 2000 இல், இவர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தாலும், உஷா ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் கிரந்தி மைதானத்தில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் ஆண்டுவிழா கொண்டாட்டங்களில் பங்கேற்றார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஆகஸ்ட் 11, 2000 அன்று தனது 80 வயதில் இறந்தார், அவரது அண்ணன் மற்றும் மூன்று மருமகன்களுடன் அவர் வாழ்ந்துவந்தார். அவரது மருமகன்களில் ஒருவரான, கேதன் மேத்தா, ஒரு பிரபலமான பாலிவுட் திரைப்படத் தயாரிப்பாளர். மற்ற மருமகன் டாக்டர் எடின் மேத்தா, ஒரு பிரபலமான மயக்க மருந்து நிபுணர், அவர் முன்பு எஸ்கார்ட்ஸ் மருத்துவமனையின் இயக்குநராக இருந்தார், இப்போது குர்கானில் மருத்துவத்துடன் தொடர்புடைய பணியில் இருந்து வருகிறார். மூன்றாவது மருமகன் டாக்டர் நிரத் மேத்தா ஆவார், அவர் ராணுவத்தில் பணிபுரிந்தார்.

PRGI No. TNBIL/25/A1569
பேப்பர்பாய்


## சிராக் பாஸ்வானை 'பரிதாபத்துக்குரியவர்' என விமர்சித்த ஆர்ஜேடி எம்எல்ஏ! பிகாரில் போராட்டம்!!




**புதுடெல்லி, பிப்.17:**

பிகாரில் சட்டப் பேரவை பட்ஜெட் கூட்டத் தொடரில் அண்மையில் பேசிய ஆர்ஜேடி எம்எல்ஏ குமார் சர்விஜீத், மத்திய அமைச்சர் சிராக் பாஸ்வானின் அரசியல் பயணத்தை குறிப்பிடுகையில், அவர் 'பரிதாபத்துக்குரிய நபர்' என்றார்.

இதற்கு லோக் ஜனசக்தி (ராம் விலாஸ்) கட்சி கடும் கண்டனம் தெரிவித்ததுடன், மாநிலத் தலைநகர் பிகாரில் ஆர்ஜேடி-யை கண்டித்து போராட்டம் நடத்தியது. இதில் அக்கட்சியின் மாநிலத் தலைவர் ராஜு திவாரி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர். அப்போது ஆர்ஜேடி கட்சியைக் கண்டித்து முழக்கமிட்ட அவர்கள், அக்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவின் உருவ பொம்மையையும் எரித்தனர்.

இது தொடர்பாக ராஜு திவாரி செய்தியாளர்களிடம் கூறுகையில், 'தலித் மக்களுக்கும், சமூகத்துக்கும் எதிராக எந்த அளவுக்கு மோசமாக ஆர்ஜேடியும், அதன் தலைவர் தேஜஸ்வி யாதவும் சிந்திக்கிறார்கள் என்பதையே அக்கட்சி எம்எல்ஏவின் சட்டப் பேரவை பேச்சு வெளிக்காட்டுகிறது. திங்கள்கிழமை சட்டப் பேரவை மீண்டும் கூடும்போது அங்கும் ஆர்ஜேடிக்கு எதிராக எங்கள் கட்சி போராட்டம் நடத்தும். மத்திய அமைச்சர் குறித்து அவதூறாகப் பேசிய எம்எல்ஏ குமார் சர்விஜீத் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற நடத்தையால்தான் அக்கட்சி தோதல்தோறும் தேய்ந்து வருகிறது' என்றார்.

## 2016-ல் 'அன்சார் இன்டரிம்' பெயரில் தீவிரவாத அமைப்பை உருவாக்கிய மருத்துவர்கள்: என்ஐஏ விசாரணையில் தகவல்

**ஸ்ரீநகர், பிப்.17:**




கடந்த 2016ம் ஆண்டிலேயே பல மருத்துவர்கள் இணைந்து அன்சார் இன்டரிம் என்ற தீவிரவாத அமைப்பை உருவாக்கியது என்ஐஏ விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 10ம் தேதி டெல்லி செங்கோட்டை அருகே கார் குண்டு வெடித்தது. இதில் 13 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) விசாரணை நடத்தி வருகிறது. அந்தக் காரில் இருந்த மருத்துவர் உமர் இந்த தாக்குதலை நடத்தியது விசாரணையில் தெரிய வந்தது. மேலும் இதில் ஹரியானாவில் உள்ள அல்பலா பல்கலைக்கழக மருத்துவர்கள் பலருக்கும் தொடர்பு இருப்பது தெரிய வந்தது. கைதான மருத்துவர்கள் 2016ம் ஆண்டே தீவிரவாதப் பாதைக்குத் திரும்பியுள்ளனர்.

ஏப்ரல் 2022-ல் ஸ்ரீநகரில் உள்ள ஈத்கா பகுதியில் ஒரு ரகசியக் கூட்டத்தை நடத்திய இவர்கள், 'அன்சார் இன்டரிம்' என்ற புதிய அமைப்பைத் தொடங்கியுள்ளனர். இந்த அமைப்புக்கு அதீல் ரத்தர் தலைவராகவும், மத போதகர் மவுல்வி இர்பான் துணைத் தலைவராகவும் செயல்பட்டுள்ளனர். இந்தக் கும்பலின் முக்கிய செயல்பாட்டாளராக இருந்தவர் 28 வயது மருத்துவர் உமர். ஹரியானாவின் பரிதாபாத் போன்ற பகுதிகளில் இருந்து வேதிப் பொருட்களைச் சேகரித்து, டெல்லியில் மக்கள் நெருக்கடி மிகுந்த இடங்கள், வழிபாட்டுத் தலங்களில் வாகன வெடிகுண்டு தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளனர். ஸ்ரீநகர் போலீஸார் இந்தக் கும்பலைச் சேர்ந்த சிலரைக் கைது செய்து வெடி பொருட்களைப் பறிமுதல் செய்தவுடன், உமர் பீதியடைந்துள்ளார். இதனால் திட்டமிட்ட காலத்துக்கு முன்பே நவம்பர் 10ம் தேதி செங்கோட்டைக்கு வெளியே குண்டுவெடிப்பை நிகழ்த்தியுள்ளார். இதில் உமரும் உயிரிழந்தார்.

## பில் கேட்ஸ் ஆந்திரா வருகை: சந்திரபாபு நாயுடுவுடன் முக்கிய ஆலோசனை



**ஆந்திரா, பிப்.17:**

மைக்ரோசாப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் ஆந்திர முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு உடன் முக்கிய ஆலோசனை நடத்துகிறார். அமராவதியில் உள்ள தலைமைச் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெறுகிறது. இதில் துணை முதல்-மந்திரி பவன் கல்யாண் மற்றும் மந்திரி நாரா லோகேஷ் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள். இந்த சந்திப்பில், குப்பம் பகுதியில் கேட்ஸ் அறக்கட்டளை ஏற்கனவே செயல்படுத்தி வரும் சுகாதாரத் திட்டங்களை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்துவது குறித்து விவாதிக்கப்படுகிறது. குறிப்பாக, டிஜிட்டல் சுகாதாரப் பதிவுகளை உருவாக்கும் 'சஞ்சீவனி' திட்டம் பற்றி அதிகாரிகள் விளக்கம் அளிக்கிறார்கள்.

மேலும், ஆந்திர அரசின் ரியல் டைம் கவர்னன்ஸ் சிஷ்டம் (RTGS) மையத்தை பில் கேட்ஸ் பார்வையிட்டு, தொழில்நுட்பம் மூலம் நிர்வாகத்தை எவ்வாறு மேம்படுத்துகின்றனர் என்பதை அறிகிறார். உந்தவல்லி கிராமத்தில் விவசாயத்தில் டிரோன் மற்றும் ஏஐ பயன்பாடு குறித்தும் அவர் ஆய்வு செய்கிறார். முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு தனது 'ஸ்வர்ண ஆந்திரா 2047' தொலைநோக்கு திட்டத்தையும் பில் கேட்ஸிடம் விளக்குகிறார். இந்த வருகை மூலம் சுகாதாரம், கல்வி மற்றும் விவசாயத் துறைகளில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மேலும் வலுப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பில் கேட்ஸின் மூன்றாவது ஆந்திர பயணமாகும்.

## உத்தராகண்டில் ஏப்.22-ல் கேதார்நாத் கோயில் திறப்பு

**டேராடூன், பிப்.17:**



வரும் ஏப்ரல் 22-ம் தேதி கேதார்நாத் கோயில் நடை திறக்கப்படுகிறது.

உத்தராகண்டில் சார் தாம் என்றழைக்கப்படும் பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகிய புனித தலங்கள் அமைந்துள்ளன. இமய மலையில் அமைந்துள்ள இந்த புனிதத் தலங்கள் குளிர்காலத்தில் மூடப்பட்டிருக்கும். கோடை காலத்தில் 4 கோயில்களின் நடைகளும் திறக்கப்படும்.

இந்த சூழலில் வரும் ஏப்ரல் 22ம் தேதி காலை 8 மணிக்கு கேதார்நாத் கோயில் நடை திறக்கப்படுகிறது. ஏப்ரல் 23ம் தேதி பத்ரிநாத் கோயில், ஏப்ரல் 19ம் தேதி கங்கோத்ரி, யமுனோத்ரி கோயில்களின் நடைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி கூறியதாவது: ஏப்ரல் 22ம் தேதி கேதார்நாத் கோயில் நடை திறக்கப்படுகிறது. இதற்கான ஆயத்தப் பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பகவான் சிவனை வழிபட வரும் பக்தர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

இந்த ஆண்டு தெய்வ பூமிக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்புக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இவ்வாறு முதல்வர் புஷ்கர் சிங் தாமி தெரிவித்துள்ளார்.

## 160 கி.மீ. வேகத்தில் சிறுவன் ஓட்டிய கார் விபத்து: 7 பேர் உயிரிழப்பு, 5 பேர் படுகாயம்

**பெங்களூரு, பிப்.17:**

பெங்களூருவை சேர்ந்த அயன் அலி (17) தன் நண்பர்கள் அஷ்ரம் ஷெரீஃப் (16), ஏத்தன் ஜார்ஜ் (17), அஷ்வின் நாயர் (17), பரத் (17), முகமது ஃபர்ஹான் (18) ஆகியோருடன் நேற்று முன்தினம் காலை 5 மணியளவில் ஹொசக்கோட்டையில் இருந்து தேவனஹள்ளி நோக்கி காரில் சென்றார். அப்போது அயன் அலியின் கார் இரு சக்கர வாகனத்தின் மீது மோதியது. அதில் இரு சக்கர வாகனத்தில் பயணித்த ககன் (27) சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

மேலும் முன்னால் சென்ற சரக்கு வாகனத்தின் மீது கார் மோதியதில் அதன் ஓட்டுநர் பாலசுப்பிரமணியன் (32) படுகாயம் அடைந்தார். அயன் அலி மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் சரக்கு வாகனத்தின் மீது மோதியதில் அதன் சக்கரங்கள் தனித்தனியாக உடைந்து எதிரில் வந்த வாகனங்கள் மீது மோதியதில் அடுத்தடுத்து 2 வாகனங்கள் விபத்துக்கு உள்ளாயின. அதனால் 4 பேர் காயமடைந்தனர். அயன் அலி பயணித்த எக்ஸ்யூவி 700 கார் உடைந்து நொறுங்கி உருக்குலைந்து போனதில் 6 பேரும் உயிரிழந்தனர். போலீஸார் மேற்கொண்ட விசாரணையில், 17 வயதான அயன் அலி மணிக்கு 160 கி.மீ. முதல் 170 கி.மீ. வேகத்தில் காரை ஓட்டியதால், விபத்து ஏற்பட்டது தெரிய வந்தது. அயன் அலி உள்ளிட்ட 6 பேரும் 10-ம் வகுப்பு மாணவர்கள் என தெரிய வந்துள்ளது.

## ஒடிசாவில் ரூ.1 லட்சத்துக்கு குழந்தையை விற்ற தந்தை

**பாலசோர், பிப்.17:**

பாலசோர்: ஒடிசா மாநிலம் பாலசோர் மாவட்டம் பரிசாஹி கிராமத்தைச் சேர்ந்த ராகேஷ் குமார் பெஹரா என்ற கொத்தனார், தனது இரண்டரை வயது ஆண் குழந்தையை விற்க ஒரு நபருடன் பேரம் பேசும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. இது குறித்த புகாரின் பேரில் போலீஸார் விசாரணையைத் தொடங்கினர்.

பின்னர் தீவிர தேடுதல் வேட்டையில், சிமினிபதி பகுதியில் இருந்து குழந்தை மீட்கப்பட்டு காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் பிரமோத் குமார் மல்லிக் தெரிவித்துள்ளார். ரூ.1 லட்சத்துக்கு விலை பேசிய ராகேஷ், ரூ.50,000 முன்பணம் பெற்றது தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து ராகேஷ் கூறும்போது, "எனக்கு நான்கு குழந்தைகள் உள்ளனர். அவர்களை வளர்க்க மிகவும் சிரமமாக இருந்தது. வறுமை காரணமாகவே இந்த முடிவை எடுத்தேன். தெரிந்த நபர் ஒருவர் மூலம் ஒருவரைத் தொடர்பு கொண்டு குழந்தையை ஒப்படைத்தேன்" என்றார். காவல்துறை தரப்பில் கூறும்போது, "ராகேஷ் இரண்டு திருமணம் செய்துள்ளார். தற்போது விற்கப்பட்ட குழந்தை அவரது இரண்டாவது மனைவிக்குப் பிறந்தது என தெரியவந்துள்ளது. கருத்து வேறுபாடு காரணமாக அந்தக் குழந்தையின் தாய் ராகேஷை விட்டுப் பிரிந்து தனியாக வசித்து வருகிறார்" என்றனர்.

## கர்நாடகா: சரக்கு வண்டியில் மாணவர்களை அழைத்துச் சென்ற ஆசிரியர்

**பெங்களூரு, பிப்.17:**

கர்நாடக மாநிலம் தட்சின கன்னட மாவட்டத்தில் உள்ள பெல்தங்கடியில் அரசு உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. அங்கு பொறுப்பு தலைமை ஆசிரியராக இருக்கும் கிரண் குமார் (45) கடந்த 9-ம் தேதி பள்ளியின் மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை நல்கூரில் உள்ள தேனீ வளர்ப்பு பண்ணைக்கு ஆய்வுப் பணிக்காக சரக்கு வாகனத்தில் அழைத்துச் சென்றார்.

இதைத் தொடர்ந்து மாணவ, மாணவிகள் மிகவும் சிரமப்பட்டு திறந்த வாகனத்தில் ஏறி, நின்றவாறு சென்ற வீடியோ சமூக வலைதளங்களில் வெளியானது. இதனைத் தொடர்ந்து பொறுப்பு தலைமை ஆசிரியர் கிரண் குமார் நேற்று பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். மேலும் அவர் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டது..

## தேசிய விரைவுச் சாலைகளுக்கான சுங்கக் கட்டண விதிகளில் மாற்றம்: புதிய நடைமுறை அமல்

**புதுடெல்லி பிப்.17:**

தேசிய விரைவுச் சாலைகளுக்கான சுங்கக் கட்டணம் வசூலிக்கும் விதிகளில் மத்திய அரசு மாற்றங்களை அறிவித்துள்ளது. இது இன்று முதல் அமலுக்கு வருகிறது.

இப்போது சாதாரண நெடுஞ்சாலைகளைவிட விரைவுச் சாலைகளுக்கு 25% கூடுதல் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் விரைவுச் சாலையின் பெரும் பகுதியில் கட்டுமானப் பணி முடியாமல் இருந்தாலும், அதன் முழு நீளத்துக்கும் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இது வாகன ஓட்டிகளுக்கு பெரும் சுமையாக உள்ளது. இந்நிலையில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தேசிய நெடுஞ்சாலைக் கட்டண (விகிதங்கள் நிர்ணயம் மற்றும் வசூல்) விதிகள், 2008-ல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி, விரைவுச் சாலை முழுமையாகத் திறக்கப்படாத பட்சத்தில், கட்டுமானப் பணிகள் முடிந்து செயல்பாட்டில் இருக்கும் தூரத்துக்கு மட்டுமே சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படும். முடிக்கப்படாத விரைவுச் சாலைகளில், தேசிய நெடுஞ்சாலைகளுக்கு இணையான குறைந்த கட்டணமே வசூலிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கட்டுமானப் பணி முடிந்து செயல்பாட்டில் உள்ள விரைவுச் சாலைப் பகுதிகளைப் பயன்படுத்த வாகன ஓட்டிகளை ஊக்குவிப்பதற்காகவே மத்திய அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதனால் பழைய நெடுஞ்சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசு குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து விரைவாக நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

இந்தத் திருத்தப்பட்ட விதிகள் இன்று முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. விரைவுச் சாலை முழுமையாகத் திறக்கப்படும் வரை அல்லது அதிகபட்சமாக ஓராண்டு வரை இந்தச் சலுகை அமலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடவுள் ராமரின் பெயர் பொறித்த மோதிரம் அணிந்தவர் திப்பு சுல்தான்: காங்கிரஸ் தலைவர் பேச்சு

**புனே, பிப்.17:**

மராட்டியத்தில் மாலேகாவன் துணை மேயராக சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிஹல் அகமதுவின் அலுவலகத்தில், 18-ம் நூற்றாண்டில் மைசூரை ஆண்ட திப்பு சுல்தான் உருவபடம் ஒன்று வைக்கப்பட்டது.

இதற்கு சிவசேனா, பா.ஜ.க. மற்றும் பல்வேறு இந்து அமைப்புகளும் எதிர்ப்பு தெரிவித்தன. இதுபற்றி காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சச்சின் சாவந்த் இன்று பேசும்போது, கடந்த காலத்தில் பா.ஜ.க. தலைவர்கள் திப்பு சுல்தானுக்கு ஆதரவு தெரிவித்தனர். அவரை புகழ்ந்தும் பேசியுள்ளனர். ஆனால் இரட்டை நிலைப்பாட்டை அக்கட்சி தற்போது எடுத்துள்ளது. இது என்ன வகையான பாசாங்குதனம்? என கேட்ட அவர், கடவுள் ராமரின் பெயர் பொறித்த மோதிரம் ஒன்றை அணியும் வழக்கம் கொண்டவர் திப்பு சுல்தான் என்றும் கூறினார்.

திப்பு சுல்தானுக்கு ஆதரவாக பா.ஜ.க. செயல்பட்டதற்கு எடுத்துக்காட்டாக சில விசயங்களையும் குறிப்பிட்டார். மும்பையில் ஒரு சாலைக்கு ஷாகீத் திப்பு சுல்தான் மார்க் என பெயர் வைக்க வேண்டும் என பா.ஜ.க. மாநகராட்சியாளர்கள் 2013-ம் ஆண்டில் முன்மொழிந்தனர்.

கர்நாடக முன்னாள் முதல்-மந்திரியான பா.ஜ.க. மூத்த தலைவர் எடியூரப்பா, திப்பு சுல்தான் கல்லறைக்கு சென்று அவரை புகழ்ந்து பார்வையாளர்கள் புத்தகத்தில் எழுதினார். 2017-ம் ஆண்டில் அப்போது ஜனாதிபதியாக இருந்த ராம்நாத் கோவிந்த், கர்நாடக சட்டசபையில் திப்பு சுல்தானை புகழ்ந்து பேசினார் என்று கூறினார்.

## பினராயி விஜயன் மீண்டும் முதல்வர் ஆவார்! காங்கிரஸ் மூத்த தலைவர் பேச்சால் சர்ச்சை!

**திருவனந்தபுரம், பிப்.17:**



திருவனந்தபுரத்தில் மாநில திட்டமிடல் துறை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய மணிசங்கர் அய்யர், பினராயி விஜயன் தலைமையிலான அரசை பாராட்டிய அதே சமயத்தில் தனது சொந்த கட்சியான காங்கிரஸை கடுமையாக விமர்சித்தார்.

கேரளத்தில் இன்னும் இரண்டு மாதங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், சமீபத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்றன. ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி கூட்டணிக்கு சற்று பின்னடைவாக அமைந்தது. இந்த நிலையில், அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணிசங்கர் அய்யர் பேசியது கேரள அரசியலில் விவாதத்தை தூண்டியுள்ளது. மணிசங்கர் அய்யர் பேசியதாவது:

"பினராயி விஜயன் தலைமையிலான கேரள அரசின் பஞ்சாயத்து ராஜ்ஜியம் நாட்டுக்கே தலைமையாக உள்ளது. ராஜீவ் காந்தியின் தொலைநோக்குப் பார்வையை வேறு எந்த மாநிலத்தையும்விட கேரளம் திறம்பட நிறைவேற்றி வருகிறது. நடைமுறைச் செயலாக்கத்தில் கேரளம் முதலிடத்தில் இருந்தாலும், சட்டப்பேரவை நடவடிக்கைகளில் கர்நாடகத்துக்கு அடுத்தபடியாக உள்ளது. ஏழைகளுக்கான தேசம், வளர்ச்சியில் தீர்க்கமான குரலைக் கொண்டு மகாத்மா காந்தியின் கனவை நனவாக்கிய ஒரே மாநிலம் மார்க்சிஸ்ட் ஆட்சியின் கீழ் இருக்கும் கேரளம்" எனத் தெரிவித்தார்.

## வங்காளதேசத்தில் புதிய பிரதமர் பதவியேற்பு விழா : இந்தியா சார்பில் ஓம் பிர்லா பங்கேற்பு

**புதுடெல்லி, பிப்.17:**

வங்காளதேசத்தில் பிரதமர் ஷேக் ஹசீனா அரசு கடந்த 2024-ம் ஆண்டு நடந்த மாணவர் போராட்டம் மற்றும் வன்முறை காரணமாக கவிழ்ந்தது. இதைத்தொடர்ந்து முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. அங்கு புதிய அரசை தேர்ந்தெடுக்க கடந்த 12-ந் தேதி நாடாளுமன்ற தேர்தல் நடந்ததது. இதில் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி போட்டியிட தடை விதிக்கப்பட்ட நிலையில், மற்றொரு முன்னாள் பிரதமரான கலீதா ஜியாவின் வங்காளதேச தேசியவாத கட்சி அமோக வெற்றி பெற்றது.

வலதுசாரி கட்சியான ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி 68 இடங்களை பெற்றது. நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் அபார வெற்றி பெற்றதை தொடர்ந்து வங்காளதேச தேசியவாத கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகனுமான தாரிக் ரகுமான் (வயது 60) புதிய பிரதமராக பதவியேற்க உள்ளார். அவரது பதவியேற்பு விழா நாளை (செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணிக்கு தலைநகர் டாக்காவில் நடக்கிறது. இந்த பதவியேற்பு விழாவில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இருந்த நிலையில், இந்தியா சார்பாக மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா செல்கிறார்.

## ஆன்லைன் பண பரிமாற்றத்திற்கு சேவை கட்டணம்: வாடிக்கையாளர்களுக்கு அதிர்ச்சி கொடுத்த எஸ்பிஐ

**புதுடெல்லி, பிப்.17:**

நாட்டின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான ஸ்டேட் பேங் ஆப் இந்தியா எனப்படும் எஸ்.பி.ஐ ஆன்லைன் பண பரிமாற்றத்தில் சேவை கட்டணத்தை அறிவித்துள்ளது. இதன்படி, ரூ.25,000 க்கு மேற்பட்ட தொகையை, செல்போன் செயலி, இண்டர்நெட் பேங்கிங் உள்ளிட்ட ஆன்லைன் பணப்பரிவர்த்தனையில் பரிமாற்றம் செய்தால் சேவைக்கட்டணம் வசூலிக்கப்படும்.

அதாவது 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் முதல் ஒரு லட்சம் வரை ஐஎம்பிஎஸ் முறையில் பணம் அனுப்பினால் 2 ரூபாய் கட்டணம் மற்றும் ஜிஎஸ்டி வசூலிக்கப்படும். ஒரு லட்சம் ரூபாய் முதல் இரண்டு லட்சம் ரூபாய் வரையில் ஐஎம்பிஎஸ் பரிவர்த்தனைகளை மேற்கொண்டால், 6 ரூபாய் கட்டணம் மற்றும் ஜிஎஸ்டி வசூலிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த சேவை கட்டணம் + ஜிஎஸ்டி என்பது எஸ்பிஐயின் இண்டர்நெட் பேங்கிங், செல்போன் செயலி வழியிலான பணப்பரிமாற்றம் யோனோ செயலி வழியிலான பணப்பரிமாற்றத்துக்கு பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய விதிகளின்படி, ரூ.25 ஆயிரத்துக்குள் பணப்பரிமாற்றம் செய்தால் சேவை கட்டணம் மற்றும் ஜிஎஸ்டி கிடையாது. எஸ்பியின் இந்த புதிய அறிவிப்பு அமலுக்கு வந்துள்ளது.




## தனிப்படை காவலரை தாக்கியதாக பாஜக, தேமுதிக நிர்வாகிகள் உள்ளிட்ட 5 பேர் கைது

**சென்னை, பிப்.17:** காவலரை தாக்கியதாக பாஜக, தேமுதிக நிர்வாகிகள் உள்ளிட்ட 5 பேரை போலீஸார் கைது செய்தனர். சென்னை நுங்கம்பாக்கம் ஜெகநாதன் சாலையில் உள்ள தனியார் மதுபான பார், நேற்று முன்தினம் இரவு 11 மணியை கடந்தும் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

அப்போது, அங்கு ரோந்துப் பணியில் இருந்த திருவல்லிக்கேணி துணை ஆணையரின் தனிப்படை காவலர் சலீம், மதுபான பாரை உடனடியாக மூடும்படி கூறியுள்ளார். அப்போது, பாரினுள் மது அருந்திக் கொண்டிருந்த 5 நபர்களை வெளியே வரும்படி சலீம் கூறியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அந்த கும்பல், சலீமுடன் கடுமையாக வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளது. வாக்குவாதம் முற்றிய நிலையில், ஆத்திரமடைந்த அவர்கள் சலீமை தாக்கியதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்த சலீம், இதுகுறித்து நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில் உடனடியாக வழக்குப் பதிவு செய்த போலீஸார், தாக்குதலில் ஈடுபட்ட 5 பேரையும் கைது செய்தனர்.

அவர்கள், குன்றத்தூரை சேர்ந்த பாஜக நிர்வாகி ஜெகநாதன் (51), அனகாபுத்தூரை சேர்ந்த தேமுதிக நிர்வாகி மகாதேவன் (56), மற்றும் தனசேகர் (52), ரவி (50), சரவணன் (50) என்பது தெரியவந்தது. கைதானவர்களிடம் போலீஸார் தொடர்ந்துவிசாரணை நடத்தி வருகின்றனர்.

## மதுரை அருகே கருமாத்தூரில் வேன் மோதியதில் குழந்தை உட்பட 3 பேர் உயிரிழப்பு



**மதுரை, பிப்.17:** கருமாத்தூரில் இருசக்கர வாகனம் மீது வேன் மோதியதில் குழந்தை உட்பட 3 பேர் உயிரிழந்தனர். மதுரை மாவட்டம் செக்கானூரணி அருகேயுள்ள கருமாத்தூரைச் சேர்ந்தவர் ஓட்டுநர் ராஜகுரு (27). இவரது அண்ணன் மகள் பிரமிளாஸ்ரீ (6). இவருக்கு நேற்று முன்தினம் இரவில் திடீரென உடல்நலம் பாதிக்கப்பட்டது.

இதையடுத்து, பிரமிளா ஸ்ரீயை இருசக்கர வாகனத்தில் ராஜகுரு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். உதவிக்காக பக்கத்து வீட்டைச் சேர்ந்த சங்கீதாவும் (28) உடன் சென்றார்.

மதுரை - தேனி பிரதான சாலையில் கருமாத்தூர் - கோவிலாங்குளம் விலக்கு அருகே வளைவில் திரும்பிய வேன் ஒன்று, எதிர்பாராதவிதமாக இருசக்கர வாகனம் மீது மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட 3 பேரும் படுகாயமடைந்தனர்.

அருகிலிருந்தவர்கள் அவர்களை மீட்டு, மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். செல்லும் வழியிலேயே ராஜகுரு உயிரிழந்தார்.

மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி பிரமிளாஸ்ரீ, சங்கீதா ஆகியோர் உயிரிழந்தனர். விபத்து தொடர்பாக செக்கானூரணி போலீஸார் வழக்குப் பதிவு செய்து, வேன் ஓட்டுநர் குறவக்குடி பாண்டி (43) என்பவரைத் தேடி வருகின்றனர்.

## 25 காரைக்கால் மீனவர்கள் கைது- இலங்கை கடற்படை அட்டூழியம்



**ராமேசுவரம், பிப்.17:** புதுச்சேரி மாநிலம் காரைக்கால் பகுதியை சேர்ந்த மீனவர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் நேற்று மீன்வளத்துறையிடம் அனுமதி டோக்கன் பெற்று கடலுக்கு புறப்பட்டனர். இதில் கீழகாசாகுடி மேடு பகுதியை சேர்ந்த பிரதாப், கிளிஞ்சல் மேடு ஜெகன் ஆகியோருக்கு சொந்தமான படகில் சுற்று வட்டார பகுதியை சேர்ந்த 25 மீனவர்களும் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.

இன்று அதிகாலை பாக்ஜலசந்தி அருகே இந்திய எல்லையை ஒட்டியுள்ள நெடுந்தீவு பகுதியில் காரைக்கால் மீனவர்கள் வலைகளை விரித்து மீன்பிடி பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது ரோந்து கப்பல்களில் வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களிடம் சர்வதேச கடல் பகுதியில் மீன்பிடிக்க அனுமதியில்லை.

எனவே இங்கிருந்து உடனடியாக செல்லுங்கள் என எச்சரித்தனர். இதையடுத்து அங்கு மீன்பிடித்து கொண்டிருந்தவர்கள் அவசர அவசரமாக கரைக்கு புறப்பட்டனர். அப்போது பிரதாப், ஜெகன் ஆகியோரது படகுகளில் வந்து மீன்பிடித்த 25 மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாக கூறி அவர்களை2 விசைப்படகுகளுடன் இலங்கை கடற்படையினர் சிறைப்படித்தனர்.

பின்னர் 25 பேரும் இலங்கை காங்கேசன் கடற்படை முகாமிற்கு அழைத்து செல்லப்பட்டனர். அங்கு அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. தொடர்ந்து அவர்கள் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இன்று பிற்பகல் கைதான மீனவர்கள் 25 பேரும் யாழ்பாணம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

எல்லை தாண்டி வந்ததாக கூறி காரைக்கால் பகுதியை சேர்ந்த மீனவர்கள் 25 பேர் சிறைப்பிடிக்கப்பட்ட சம்பவம் அப்பகுதி மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

மீனவர்களை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் வலியுறுத்தி உள்ளனர்.

## கோவை | கம்பிவேலியில் சிக்கிய பெண் சிறுத்தை உயிரிழப்பு



**கோவை, பிப்.17:** கோவை மாவட்ட எல்லையில் உள்ள வாளையாறு, மொடமாத்தி, சின்னாம்பதி உள்ளிட்ட வனப் பகுதிகளில் அதிக அளவிலான சிறுத்தைகள் வாழ்ந்து வருகின்றன.

இவை உணவுக்காகவனத்தை விட்டு வெளியேறும். மேலும், வன எல்லை கிராமங்களில் வீடுகளில் மக்கள் வளர்க்கும் ஆடு, கோழிகளை அவ்வப்போது வேட்டையாடுவது வழக்கம்.

இந்நிலையில், மதுக்கரை வனச்சரகம் மொடமாத்தி அருகே ஐயன்பாதி பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான பட்டா நிலத்தில் நேற்று சிறுத்தை ஒன்று வந்துள்ளது. அப்போது, அங்கிருந்த முள் கம்பி வேலியில் சிறுத்தை சிக்கி உயிரிழந்தது.

இதை பார்த்த அப்பகுதி மக்கள் மதுக்கரை வனத்துறையினருக்கு தகவல் அளித்தனர். அதன்பேரில் அங்கு சென்ற வனத்துறையினர் சிறுத்தையின் சடலத்தை மீட்டு விசாரணை நடத்தினர்.

இதில், கம்பிவேலியில் சிக்கி இறந்து கிடத்தது 2 வயதுடைய பெண் சிறுத்தை என்பது தெரியவந்தது. இது தொடர்பாக வனத்துறையினர் கூறும்போது, "வனத்தை விட்டு வெளியே வந்த சிறுத்தை, கம்பிவேலியில் சிக்கி உயிரிழந்துள்ளது.

அதே இடத்தில் உடற்கூறாய்வு செய்யப்பட்டது. வன கால்நடை மருத்துவர்களின் அறிக்கையின் முடிவில் தான் சிறுத்தை உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும்" என்றனர்.

## மன்னார் வளைகுடா கடற்பகுதியில் ரூ.25 கோடி மதிப்புள்ள போதைப் பொருள் பறிமுதல்



**ராமேசுவரம், பிப்.17:** மன்னார் வளைகுடா கடற்பகுதியில் ரூ.25 கோடி மதிப்புள்ள 'ஹாஷிஷ்' போதைப் பொருளை பறிமுதல் செய்த இலங்கை கடற்படையினர், இது தொடர்பாக 2 பேரைக் கைது செய்தனர்.

தலைமன்னார் அருகே மன்னார் வளைகுடா கடற்பகுதியில் இலங்கை கடற்படையினர் ரோந்து சென்றபோது, சந்தேகத் துக்குரிய வகையில் தமிழக எல்லையிலிருந்து இலங்கை எல்லைக்குள் ஒரு ஃபைபர் படகு நுழைந்தது.

அந்தப் படகை இலங்கை கடற்படையினர் விரட்டிப் பிடித்து சோதனையிட்ட போது, உள்ளே போதைப் பொருள் பதுக்கி வைத்திருப்பது தெரிய வந்தது. இதையடுத்து, படகில் இருந்த இலங்கையைச் சேர்ந்த 2 பேரைப் பிடித்து, தாழ்வுப்பாடு கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

பின்னர், இருவரையும் கைது செய்த இலங்கை கடற்படையினர், படகில் இருந்த 50 கிலோ 'ஹாஷிஷ்' போதைப் பொருள் மற்றும் படகை பறிமுதல் செய்தனர். பின்னர் அவரை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருளின் சர்வதேச மதிப்பு ரூ.25 கோடி ஆகும். கடத்தலில் தொடர்புடையவர்கள் குறித்து இலங்கை கடற்படையினர் விசாரித்து வருகின்றனர்.

## சென்னை விமான நிலையத்தில் ரஜினிக்கு சால்வை அணிவித்து வரவேற்ற ரசிகர்கள்!



**சென்னை, பிப்.17:** ஜெயிலர் 2 படப்பிடிப்பு முடிந்து நடிகர் ரஜினிகாந்த் மீண்டும் சென்னை திரும்பினார்.

கேரளத்தில் ஜெயிலர் 2 படப்பிடிப்புக்காக சென்னை விமான நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் சென்ற நடிகர் ரஜினிகாந்த் படப்பிடிப்பை முடிந்துகொண்டு திங்கள்கிழமை மீண்டும் சென்னை திரும்பினார்.

சென்னை விமான நிலையத்தில் நடிகர் ரஜினிகாந்துக்கு அவரது ரசிகர்கள் சால்வை அணிவித்து வரவேற்பு அளித்தனர்.

விமான நிலையத்தில் நடிகர் ரஜினியுடன் செஃல்பி எடுத்து அவரது ரசிகர்கள் மகிழ்ந்தனர்.

அப்போது ரசிகர் ஒருவர் அவரது மகளின் திருமணத்திற்காக ரஜினியிடம் அழைப்பிதழ் வழங்கினார். தொடர்ந்து, ரசிகரின் மகள் ரஜினியின் காலில் விழுந்து ஆசிர்வாதமும் பெற்றார்.

மேலும் காரில் ஏறும்பொழுதும் ரசிகர்கள் சூழ்ந்து ரஜினியுடன் செஃல்பி எடுத்து மகிழ்ந்தனர்.

## சென்னையில் பிப்ரவரி இறுதிக்குள் புதிதாக 245 மின்சார பேருந்துகள் இயக்கப்படும்: அதிகாரிகள் தகவல்




**சென்னை, பிப்.17:** இம் மாத இறுதிக்குள் சென்னையில் மேலும் 245 மின்சார பேருந்துகள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என மாநகர் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்க, டீசல் பேருந்துகளுக்கு பதிலாக மின்சார பேருந்துகளைப் பயன்படுத்த தமிழக அரசு முடிவு செய்தது. அதன்படி, கடந்த ஜூன் மாதம் சென்னையில் 120 மின்சாரப் பேருந்துகளின் சேவை தொடங்கப்பட்டது.

வியாசர்பாடி பணிமனையில் இருந்து தொடங்கப்பட்ட இந்த பேருந்து சேவை, தொடர்ந்து பெரும்பாக்கம், பூந்தமல்லி ஆகிய பணிமனைகளில் இருந்தும் இயக்கப்பட்டு வருகின்றன.

625 மின்சார பேருந்துகளை வாங்குவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட நிலையில், தற்போது வரை 380 மின்சார பேருந்துகள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. மேலும், 245 பேருந்துகளை விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவர மாநகர் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதுகுறித்து மாநகர் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் கூறியதாவது: பல்லவன் இல்லம் மத்திய பணிமனையில் மின்சார பேருந்துகளுக்கான பணிமனை கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டு, தயார் நிலையில் உள்ளது. 245 மின்சார பேருந்துகள் தயாரிப்பு பணிகள் முடிந்துள்ளன, விரைவில் சோதனை ஓட்டம் நடத்தப்படும்.

பிப்ரவரி இறுதிக்குள் இவை பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். இதில் 145 பேருந்துகள் பல்லவன் இல்லம் பணிமனையுடனும் 100 பேருந்துகள் தண்டையார் பேட்டை பணிமனையுடனும் இணைக்கப்படும். 2-வது கட்டமாக மேலும் 600 மின்சார பேருந்துகளை கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கையில் மாநகர் போக்குவரத்துக் கழகம் ஈடுபட்டு வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினார்.

## தூத்துக்குடியில் சோகம்: பைக் மீது வேன் மோதியதில் குழந்தைகள் உள்பட 5 பேர் பலி



**தூத்துக்குடி, பிப்.17:** தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே சுற்றுலா வேன் மற்றும் பைக் நேருக்கு நேர் மோதியது.

இந்த விபத்தில் ஒரே பைக்கில் சென்ற 2 குழந்தைகள் உள்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

விபத்துக்கு காரணமான வேன் ஓட்டுநரை போலீசார் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பைக் மீது வேன் மோதியதில் 5 பேர் பலியானது அந்தப் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கடத்தப்பட்ட 5 கோயில்களின் சிலைகள்: திரும்ப ஒப்படைக்க ஆஸ்திரேலியா, அமெரிக்கா சம்மதம்!



**சென்னை, பிப்.17:** தமிழக கோயில்களில் இருந்து திருடப்பட்டு, ஆஸ்திரேலியா, அமெரிக்க நாடுகளுக்கு கடத்திச் செல்லப்பட்ட தொன்மையான சிலைகளை மீண்டும் தமிழக அரசிடம் ஒப்படைக்க ஆஸ்திரேலியா, அமெரிக்க நாடுகள் சம்மதம் தெரிவித்துள்ளன.

தமிழகத்தில் இருந்து திருடப்பட்டு வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட சிலைகள், தொன்மையான பொருள்கள், கலை பொக்கிஷங்களை கண்டறிந்து அவற்றை மீட்கவும், சம்மந்தப்பட்ட குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் பணியில் சிலை கடத்தல் தடுப்பு பிரிவு போலீஸாா் தொடா்ந்து ஈடுபட்டு வருகின்றனா்.

அந்த வகையில், தமிழக கோயில்களில் இருந்து திருடப்பட்ட சிலைகள் ஆஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் உள்ள சா்வதேச முக்கிய நிறுவனங்களிலும், ஏல நிறுவனங்களிலும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளன. அவற்றை மீட்பதற்கான நடவடிக்கையில் சிலை கடத்தல் தடுப்பு பிரிவினா் முயற்சிகளை மேற்கொண்டனா். இதையடுத்து அந்த சிலைகளை மீண்டும் தமிழகத்திடம் ஒப்படைக்க ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா அரசுகள் சம்மதம் தெரிவித்துள்ளன.

அதன்படி, திருவாரூா் மாவட்டம் கடுவன்குடி கிராமம், கைலாசநாதா் கோயிலின் சுமாா் ரூ.2 கோடி மதிப்பிலான திரிசூல மங்கள காளி (பத்ரகாளி) சிலையையும், அதே கோயிலின் சுமாா் ரூ.4 கோடி மதிப்பிலான தொன்மையான நந்தி கற்சிலையையும், ஒப்படைக்க ஆஸ்திரேலிய அரசு முன்வந்துள்ளது.

இதுபோல, தஞ்சை மாவட்டம் கும்பகோணம், மானம்பாடி கிராமத்திலுள்ள அருள்மிகு நாகநாதசாமி கோயிலின் சுமாா் ரூ.2 கோடி மதிப்பிலான ஆறு தலைகளை கொண்ட ஸ்கந்த காா்த்திகேயன்(சுப்பிரமணியா்) சிலையையும் ஆஸ்திரேலியா அரசு கேன்பரா நகரின், நேஷனல் கேலரி நிறுவனத்திடம் இருந்து இந்தியாவிடம் முறையாக திரும்ப ஒப்படைக்க ஒப்புக்கொண்டுள்ளது.

இதேபோல், அமெரிக்காவின் வாஷிங்டனில் உள்ள டி.சி. ப்ரீா் சேக்லா் மியூசித்தில் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரம் கிராமத்தின் பழைமையான நாரீஸ்வரா் கோயிலின் நாயனாா் மற்றும் சுந்தரா்-பரவை நாச்சியாா் எனும் புனித சுந்தரா் சிலையையும், தஞ்சை மாவட்டம், மன்னாா்குடி தாலுகா, ஆலந்தூா் கிராமத்தில் 13-ஆம் நூற்றாண்டை சோ்ந்த அருள்மிகு விஸ்வநாதசாமி கோயிலின் சோமஸ்கந்தா் சிலை உள்பட 2 சிலைகளை ஒப்படைக்க அமெரிக்க அரசு முன்வந்துள்ளன.

இந்த சிலைகள் அனைத்தும் உரிய நடவடிக்கைகளுக்கு பின்னா், தமிழ்நாட்டுக்கு கொண்டுவரப்பட்டு சம்மந்தப்பட்ட கோயில்களில் ஒப்படைக்கப்படும் என சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

# சென்னையில் மின்சார ரயில் சேவையில் மாற்றம்



**சென்னை, பிப்.17:** சென்னை சென்ட்ரல் - கூடூர் மார்க்கத்தில் சூலூர்பேட்டை யார்டில் பொறியியல் பணி காரணமாக, புறநகர் மின்சார ரயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன் படி, சென்னை சென்ட்ரல் - சூலூர்பேட்டைக்கு வரும் 19, 21 ஆகிய தேதிகளில் நண்பகல் 12.10 மணிக்கு புறப்படும் மின்சார ரயில், எளாவூர்-சூலூர்பேட்டை இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

சூலூர்பேட்டை-சென்னை சென்ட்ரலுக்கு மேற்கண்ட நாட்களில் மதியம் 1.15 மணிக்கு புறப்பட வேண்டிய மின்சார ரயில், சூலூர்பேட்டை - எளாவூர் இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

தாம்பரம் மெமு ரயில் சென்னை எழும்பூர் - விழுப்புரம் மார்க்கத்தில், மைலம் - திண்டிவனம் இடையே பொறியியல் பணி காரணமாக, தாம்பரம் - விழுப்புரம் மெமு பயணிகள் ரயில் சேவையில் மாற்றம் செய்யப்படுகிறது.

அதன் படி, தாம்பரம் - விழுப்புரத்துக்கு வரும் 17, 19, 21 ஆகிய தேதிகளில் காலை 9.40 மணிக்கு புறப்படும் மெமு பயணிகள் ரயில், திண்டிவனம் - விழுப்புரம் இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

விழுப்புரம் - சென்னை கடற்கரைக்கு மேற்கண்ட நாட்களில் மதியம் 1.30 மணிக்கு புறப்படும் மெமு பயணிகள் ரயில், விழுப்புரம் - திண்டிவனம் இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

இத்தகவல் சென்னை ரயில்வே கோட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குறைபாட்டுடன் பிறந்த குழந்தையை கொன்ற வழக்கு: தம்பதிக்கு ஆயுள் சிறையை உறுதி செய்த நீதிமன்றம்



**மதுரை, பிப்.17:** குறைபாட்டுடன் பிறந்த குழந்தையைக் கொன்ற வழக்கில் தம்பதிக்கு விதித்த ஆயுள் தண்டனையை உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உறுதி செய்தது. விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்தவர் முனீஸ்வரன். இவரது மனைவி ரேவதி. தனியார் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து வந்தார்.

இவர்களுக்கு மனநலப் பாதிப்புடன் பெண் குழந்தை பிறந்தது. குழந்தையைப் பராமரிப்பதற்காக ரேவதி பேராசிரியர் பணியிலிருந்து விலகினார்.

எனினும், குழந்தையை நினைத்து கணவன், மனைவி இருவரும் மன உளைச்சலுக்கு உள்ளானார்கள். 2018-ல் குழந்தை விஷமருந்தியதாக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கு சிகிச்சை பலனின்றி இறந்தது. குழந்தையை விஷம் கொடுத்து கொலை செய்ததாக கணவன், மனைவியை போலீஸார் கைது செய்தனர்.

இந்த வழக்கில் இருவருக்கும் ஸ்ரீவில்லிபுத்தூர் நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியது. இதை எதிர்த்து இருவரும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல் முறையீடு மனு தாக்கல் செய்தனர். மனுவை விசாரித்து நீதிபதிகள் ஜி.கே.இளந்திரையன், ஆர்.பூர்ணிமா அமர்வு பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: இந்த வழக்கில் பல சாட்சிகள், பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளனர்.

இருப்பினும், பெற்றோரால் விஷம் கொடுக்கப்பட்டு குழந்தை இறந்தது என்பது மருத்துவ ஆதாரங்கள் மூலம் தெரிய வருகிறது. குழந்தையை வளர்ப்பதில் குற்றம் சாட்டப்பட்ட பெற்றோர் சந்தித்த சிரமங்களை இந்த நீதிமன்றம் அனுதாபத்துடன் கருத்தில் கொண்டாலும், அந்தக் குழந்தை தானாக இந்த உலகுக்கு வரவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளை பெற்றோர் கொலை செய்வதற்கு சட்டம் அனுமதித்தால், அது போன்ற குழந்தைகள் யாரும் இந்த உலகில் உயிர்வாழ முடியாது. குழந்தை மனநலப் பாதிப்புடன் பிறந்தாலும், உடல் ஊனத்துடன் பிறந்தாலும் அல்லது எந்தக் குறைபாடும் இல்லாமல் பிறந்தாலும் அவர்களைப் பராமரிப்பது பெற்றோரின் கடமையாகும்.

சட்டத்தை யாரும் கையில் எடுத்துக்கொண்டு, மற்றொருவரின் உயிரைப் பறிக்க உரிமையில்லை. மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்காக பல பெற்றோர் பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள். இந்த வழக்கில், இருவருக்கும் விசாரணை நீதிமன்றம் தண்டனை வழங்கியது சரியே. மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.

## நூல்கள் வெளியீடு




ஞாயிறு மாலை கோவை சிருஷ்டி மஹாலில் அ.கரீம் அவர்களின் ரஹால்களை உடைக்கும் இபுலிசுகள், சைலன்ஸ், என்ற இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டது.

## பண்ணைத் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்க்கூடல்




சென்னை மாதவரத்தில் நடைபெற்ற பண்ணைத் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்க்கூடல் நிகழ்வில் தன்முனைக் கவிதைகளின் செயல் தலைவர் கவிஞர் ந. வேலாயுதம் அவர்களுக்கு விழுதுக் கவிஞர் விருதினை முத்தமிழ் ஆய்வு மன்ற செயலர் நா. பாபு அவர்கள் வழங்கினார். விழா மேடையில் முனைவர் ஞான பாரதி,பேராசிரியர் .மணிமேகலை சித்தார்த்தன், பாவலர்.சீனி பழனி பண்ணைத் தமிழ்ச்சங்கத் தலைவர் கவிக்கோ துரை வசந்தராசன் கவிஞர். முருகு பாண்டியன். ஆகியோர்.

# தாம்பரம் ரெயில் நிலையத்தில் குளிர்சாதன காத்திருப்பு அறை- 1 மணி நேரத்துக்கு ரூ. 35 கட்டணம்

**தாம்பரம், பிப்.17:** தாம்பரம் ரெயில் நிலையம் 3-வது முனையமாக மாறிய பிறகு இங்கு தினமும் 2 லட்சத்து 30 ஆயிரம் பயணிகள் வந்து செல்கிறார்கள். மேலும் ஆயிரக்கணக்கான பயணிகள் எக்ஸ்பிரஸ் ரெயில்கள் மூலம் தென் மாவட்டங்கள் மற்றும் வட மாநிலங்களுக்கு செல்கின்றனர்.

இதையடுத்து பயணிகள் வசதிக்காக தாம்பரம் ரெயில் நிலையத்தில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.



இதில் ஒரு பகுதியாக குளிர்சாதன காத்திருப்பு அறை திறக்கப்பட்டுள்ளது. இந்த காத்திருப்பு அறையை தாம்பரம் ரெயில் நிலைய பொதுமேலாளர் முகமது அப்துல் ரகுமான் திறந்து வைத்தார்.

தாம்பரம் ரெயில் நிலையத்தின் மேற்கு நுழைவு பகுதியில் இந்த குளிர்சாதன காத்திருப்பு அறை அமைந்துள்ளது. இந்த காத்திருப்பு அறை ரூ.20 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதில் ஒரே நேரத்தில் 80 பேருக்கு போதுமான இருக்கை வசதிகள் உள்ளன.

இதன் உட்புறத்தில் மிகவும் சொகுசான சோபா இருக்கை வசதி, சாய்வு நாற்காலிகள் மற்றும் பொருட்கள் வைப்பதற்கான ரேக்குகள் ஆகியவை உள்ளன. மேலும் இங்கு பாலூட்டும் அறை வசதியும் உள்ளது. பெண்கள் மற்றும் ஆண்களுக்கென தனித்தனியான நவீன கழிப்பறை வசதிகள் உள்ளன.

மேலும் குடிநீர் வசதி, மொபைல் சார்ஜிங் பாயிண்டுகள், இலவச வைபை வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளும் இடம்பெற்றுள்ளன. ரெயில் விவரங்களை காட்டும் டிஜிட்டல் காட்சி பலகை மற்றும் பொது அறிவிப்பு அமைப்பு ஆகிய வசதிகளும் உள்ளன. இந்த காத்திருப்பு அறை 24 மணி நேரமும் இயங்கும்.

இந்த அறைக்கு ஒரு மணி நேரத்துக்கான கட்டணம் 35 ரூபாய். 5 முதல் 12 வயதுள்ள குழந்தைகளுக்கு ரூ.20 கட்டணம் ஆகும். 5 வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு கட்டணம் இல்லை. இதற்கான 5 ஆண்டுகால உரிமம் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து தெற்கு ரெயில்வே அதிகாரிகள் கூறியதாவது:-

தாம்பரம் ரெயில் நிலையத்தில் பயணிகளின் வசதிக்காக குளிர்சாதன வசதி கொண்ட நவீன காத்திருப்போர் அறையை தொடங்கி உள்ளோம். இதுபோன்று தமிழகத்தில் பயணிகள் வருகை அதிகம் உள்ள 100-க்கும் மேற்பட்ட ரெயில் நிலையங்களில் இந்த ஆண்டு இறுதிக்குள் பயணிகள் காத்திருப்பு அறைகள் அமைக்க இலக்கு நிர்ணயம் செய்துள்ளோம்.

உறுதி செய்யப்பட்ட டிக்கெட் அல்லது ஆர்.ஏ.சி. டிக்கெட் வைத்துள்ள பயணிகள் தங்களது பயண வகுப்பு எதுவாக இருந்தாலும், ரூ.35 கட்டணத்தை செலுத்தி இந்த அறையை பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கு முன் கூட்டியே பதிவு செய்ய தேவையில்லை. நேரடியாக சென்று கட்டணம் செலுத்தி பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.




# அ.தி.மு.க தன்மானம் உள்ள கட்சி- எடப்பாடி பழனிசாமி



**ஈரோடு, பிப்.17:** ஈரோடு மாவட்டம் அரியப்பம்பாளையம் பகுதியில் அதிமுக பொதுச்செயாளர் இபிஎஸ் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

அப்போது, பரப்புரை வாகனத்தில் வருகை தந்த இபிஎஸ்-க்கு வழிநெடுகிலும் திரண்டு நின்ற மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

தேர்தல் பிரசாரத்தின்போது எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:-

பாஜகவின் களை கழக் அதிமுக என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திட்டமிட்டு அவதூறு பிரச்சாரம் செய்கிறார். காங்கிரசுக்கு திமுக கட்சி அடிமை. அதிமுக தன்மானம் உள்ள கட்சி. முதலமைச்சரின் தனிநபர் விமர்சனத்திற்கு பலமுறை பதில் சொல்லிவிட்டேன்.

அதிமுக ஆட்சி காலத்தின் விவசாயம் செழித்து இருந்தது. அதிமுக ஆட்சி காலத்தில் குறைகள் என சுட்டிக்காட்ட முடியுமா? ஜெயலலிதாவின் மறைவுக்குபின் பல பிரச்சனைகளை அதிமுக சந்தித்தது. தொண்டர்களின் ஆதரவால கட்சியை காப்பாற்றினோம்.

சட்டமன்றத்தில் நான் பெரும்பான்மையை நிரூபித்தபின் சட்டையை கிழித்துகொண்டு வீதியில் சென்றார் மு.க.ஸ்டாலின்.

சட்டமன்றத்தில்நான் பெரும்பான்மை நிரூபித்ததை முதலமைச்சரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு அடியேடு சீர்கெட்டு விட்டது. தமிழ்நாட்டில் போதை ஆசாமிகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகிறது.

பொது மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் காவலர்களுக் பாதுகாப்பு இல்லை.

ஸ்டாலின் நாட்டு மக்களை பற்றி சிந்திக்க மாட்டார். அவரது வீட்டு மக்களை பற்றி மட்டும்தான் சிந்திப்பார்.

நிர்வாக திறமையின்மை காரணமாக அரசு காலி பணியிட்கள் அப்படியே இருக்கிறது.

திமுக ஆட்சியில் விலைவாசி உயர்வு, வரி உயர்வு.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# "விஜயகாந்த் 60 கி.மீ. என்றால் விஜய் 100 கி.மீ. வேகப் புயல்" - டிடிவி தினகரன் கணிப்பு



**சென்னை, பிப்.17:** விஜயகாந்த் 60 கி.மீ. வேகப் புயல் என்றால் விஜய் 100 கி.மீ. வேகத்தில் வரும் புயல். இதனால் திமுகவுக்கு கடும் பாதிப்பு ஏற்படும் என்று டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது: வரும் சட்டமன்றத் தேர்தலில் விஜய்யால் மிகப்பெரிய அரசியல் மாற்றம் ஏற்படும். சொல்லப்போனால், விஜயகாந்த் ஏற்படுத்திய தாக்கத்தை விட இது அதிகமாக இருக்கும். விஜயகாந்த் 60 கி.மீ வேகத்தில் வந்த புயல் என்றால், விஜய் 100 கி.மீ வேகத்தில் வரும் புயல்.

இதன் காரணமாக, 2006 தேர்தலை விடவும் இந்த முறை திமுக கடுமையான பாதிப்புக்குள்ளாகும். கடந்த 2006 தேர்தலில் விஜயகாந்தின் வருகையால்தான் திமுக 'மைனாரிட்டி' அரசாகப் பொறுப்பேற்கும் சூழல் உருவானது. அப்போது திமுக, அதிமுக ஆகிய இரு தரப்பிற்குமே பாதிப்பு இருந்தது. ஆனால், 2026-ல் விஜய்யால் அதைவிட அதிக பாதிப்பு ஏற்படும். அன்று விஜயகாந்த் 8 சதவீத வாக்குகளைப் பெற்றதுடன் ஒரு தொகுதியிலும் வென்றார்.

விஜய் பாதிப்பை ஏற்படுத்துவார் என்று நான் சொல்வதால், அவருடன் கூட்டணி வைக்க வேண்டும் என்ற கட்டாயம் எனக்கு இல்லை. நான் எதார்த்தமான கள நிலவரத்தைச் சொல்கிறேன்; அதற்காக நான் அவரோடு இணைவேன் என யாரும் எதிர்பார்க்க வேண்டாம். எனக்கு அவரைப் பார்த்துப் பொறாமையும் இல்லை, திமுகவை போல பயமும் இல்லை.

முதலமைச்சர் ஸ்டாலினும், உதயநிதியும் விஜய்யைப் பற்றி நேரடியாகப் பேச அஞ்சுகிறார்கள். அவர்களைப் போல மறைமுகமாகத் தாக்காமல், நான் எதையும் நேரடியாகவே பேசுவேன்.

அன்றைக்கு அதிமுகவை ஊழல் கட்சி என்று விஜய் விமர்சித்தபோது, 'முதலில் அவரை வீட்டை விட்டு வெளியே வரச் சொல்லுங்கள்' என்று துணிச்சலாகச் சொன்னவனும் நான்தான்.இவ்வாறு அவர் கூறினார்.

# 5 தொகுதிகள் வேண்டுமாம்... மமக பொதுக்குழு தீர்மானம்

**சென்னை, பிப்.17:** திமுக கூட்டணியில் இடம்பெற்றுள்ள மனிதநேய மக்கள் கட்சிக்கு வரும் சட்டப்பேரவை தேர்தலில் 5 தொகுதிகளை ஒதுக்க பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றி உள்ளதாக அக்கட்சி தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா தெரிவித்தார்.

மனிதநேய மக்கள் கட்சியின் சிறப்பு பொதுக்குழு கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா தலைமை வகித்தார்.

கூட்டத்தில் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவு அளித்து, மகத்தான வெற்றியை திமுக கூட்டணி பெறுவதற்கு முதன்மை காரணமாக நமது களப்பணி அமைய வேண்டும்;

சட்டப்பேரவை, நாடாளுமன்றத்தில் சிறுபான்மை முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் குறைந்துவரும் சூழலில், வரும் சட்டப்பேரவை தேர்தலில் திமுக, இதர கூட்டணி கட்சிகள் வேட்பாளர்களை நிறுத்தும்போது, முஸ்லிம்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும்.

மனிதநேய மக்கள் கட்சிக்கு வரும் சட்டப்பேரவை தேர்தலில் 5 தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என்று பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றி உள்ளோம்.

தமிழகம் முழுவதும் வியாபித்து இருக்கும் கட்சியாக மனிதநேய மக்கள் கட்சி உள்ளது. 5 தொகுதிகளை தருவதற்கு திமுக தலைமை நிச்சயமாக பரிசீலிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

இதுதொடர்பாக பேச்சுவார்த்தை தொடங்கவில்லை. "ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு" என்பது தமிழகத்துக்கு பொருந்தாது.இவ்வாறு அவர் கூறினார்.

# தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டும் கட்சிகள்: கோவையில் வாடகை வாகனங்களுக்கு மவுசு அதிகரிப்பு

**கோவை, பிப்.17:** தமிழ்நாட்டில் சட்டசபை தேர்தல் விரைவில் நடக்க உள்ளது. தேர்தலை சந்திக்க அனைத்து கட்சிகளும் கூட்டணி பேச்சு வார்த்தை, தொகுதி பங்கீடு உள்ளிட்ட விஷயங்களில் தீவிரம் காட்டி வருகின்றன.

தேர்தல் கூட்டணி இன்னும் இறுதிக்கட்டத்தை எட்டாத நிலையில், முக்கிய கட்சிகள் இப்போதே தேர்தல் களத்தில் இறங்கி விட்டன.

கோவையில் அ.தி.மு.க. சார்பில் மினி லாரி மற்றும், மினி ஆட்டோக்களை வாடகைக்கு பிடித்து ஒவ்வொரு வார்டு, பகுதி வாரியாக சென்று அ.தி.மு.க.வினர் தெருமுனை பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதுவரை நூற்றுக்கணக்கான தெருமுனை பிரசாரங்கள் நடத்தப்பட்டுள்ளது. இதற்காக வாகனங்களை வாடகைக்கு பிடித்து மைக் மூலம் பிரசாரம் நடக்கிறது.

அதேபோன்று பா.ஜ.க சார்பில் மக்களிடம் கருத்து கேட்கும் இயக்கம் நடத்தப்படுகிறது.

இதற்காக வாகனங்களில் ஒவ்வொரு பகுதியாக சென்று வாகனங்களை நிறுத்தி வைத்து பொதுமக்களிடம் துண்டு சீட்டு கொடுத்து நிரப்பி, அதனை உள்ளே போடுமாறு தெரிவித்து வருகின்றனர். இந்த வாகனங்களும் கோவை பகுதியை சுற்றி வருகின்றன.

அதேபோன்று தி.மு.க சார்பில், தேர்தல் அலுவலகம் திறப்பு, ஆட்டோ நிறுத்தம் திறப்பு, பொதுக்கூட்டம் என்று கோவையில் தேர்தல் களத்தில் தி.மு.க தீவிரமாக வலம் வருகிறது.

தி.மு.க., அ.தி.மு.க கட்சியினர் தேர்தல் களத்தில் தினமும் வாகனங்களை வாடகைக்கு எடுத்து மக்களை சந்தித்து வருகிறார்கள்.

இதனால் வாடகை வாகனங்கள் வைத்திருப்பவர்கள் தொழில் சூடு பிடித்துள்ளது.

இதுவரை லோடுகளுக்கு அனுப்பப்பட்டு வந்த இந்த வாகனங்கள் தற்போது தேர்தல் களத்தில் வலம்வர தொடங்கியுள்ளன.

அரசியல் கட்சிகள் போட்டி போட்டு வாடகைக்கு அமர்த்தி வருவதால் இனி லாரி வாகனங்கள், மினி ஆட்டோக்களுக்கான மவுசு அதிகரித்துள்ளது.

இதனால் வாடகை கட்டணம் உள்ளிட்ட கட்டணமும் அதிகரித்து வருகிறது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM